"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

பவ வருஷம் ★ 1995 ★ தை ★ மாசி ★ பங்குனி


# சிவநெறி

# SIVANERI

## முத்திங்கள் சஞ்சிகை

திருக்கோணமலை மாவட்ட இந்து இளைஞர் பேரவையின் வெளியீடு

மலர் ★ 4 ★ இதழ் ★ 2



உள்ளே ...

★ உலக இன்பத்திற்கு ஒரு வழி உண்டா?
★ சுவாமி சிவானந்தர் அருள்வாக்கு!
★ பக்த வத்ஸலம்
★ பக்திக்கு குலமேது
★ திருக்கோணேஸ்வரம் இசைச் சித்திரம்
★ சித்து அறிவியல் சுவட்டில்
★ சிவராத்திரி விரதமகிமை
★ செய்திச்சரம்
★ மாணவர் உலகு
★ வினாவிடைப்புதிர்

யாம் இருக்குமிடத்தில் சகல செல்வங்களும்
கற்பக விருட்சமாக வளரும்

விலை ரூபா 12/=

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




பேரவையின் திட்ட ஆலோசகராக இருந்து அண்மையில் தாயகமான அவுஸ்திரேலியா திரும்பிய திரு. கிறிஸ்றைஸ்லி (அவுஸ்திரேலியத் தொண்டர்) அவர்களின் பிரியாவிடை நிகழ்வில் பேரவையின் மதிப்பார்ந்த பொதுச்செயலாளர் சிவஞானச் செல்வர் திரு. செ. சிவபாதசுந்தரம் அவர்கள் பாராட்டுரை ஆற்றுகின்றமை.




திரு. கிறிஸ் றைஸ்லி அவர்களுக்குப் பேரவைத் தலைவர் திரு. வ.தங்கராசா அவர்கள் எமது அன்பளிப்பாக மோதிரம் அணிவிக்கின்றமை.



பிரியா விடை விழா நாயகன் திரு. கிறிஸ் றைஸ்லி உரையாற்றுவதையும் திருமதி. கிறிஸ் றைஸ்லி அருகிலிருப்பதையும் காணலாம்.




திரு. கிறிஸ் றைஸ்லியும், திருமதி கிறிஸ் றைஸ்லியும் பிரியாவிடை பெறும்போது பேரவையின் நிர்வாகிகள் இந்து இளைஞர் மன்றப் பிரதிநிதிகள் தொண்டர்களுடன் காணப்படுகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



## விநாயகர் துதி

திருச்சிற்றம்பலம்.

மாற்றரிய தொல்பிறவி மறிகடலி னிடைப்பட்டுப்
போற்றுதன் குரைகழற்றாட் புணைபற்றிக்
கிடந்தோரைச்
சாற்றரிய தனிமுத்தித் தடங்கரையின் மிசையுய்ப்பக்
காற்றெறியுந் தழைசெவிய கடாக்களிற்றை
வணங்குவாம்
(காசிகாண்டம்)

திருச்சிற்றம்பலம்.



உ
சிவமயம்



திருநாவுக்கரசு நாயனார்
அருளிச் செய்த

## நமச்சிவாயத் திருப்பதிகம்

திருச்சிற்றம்பலம்.

இல்லக விளக்கது இருள் கொடுப்பது
சொல்லக விளக்கது சோதியுள்ளது
பல்லக விளக்கது பலருங் காண்பது
நல்லக விளக்கது நமச்சிவாயவே.

திருச்சிற்றம்பலம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எண்ணம்

ஈழமணித்திருநாடு இன்பப் பூங்காவாக இரண்டு தசாப்த காலத்திற்கு முன் நிலவிய தென்றால் யாரும் மறுக்கமாட்டார்கள். மனிதம் மதிக்கப்பட்டது. மனிதனை மனிதன் மதித்தான். ஒற்றுமை உறவு ஐக்கியம் என்பன வாழ்ந்தன. உள்ளத்தால் ஒருவரை ஒருவர் நேசித்தனர். எல்லோரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே அல்லாமல் வேறொன்றறியேன் பாரபரமே என்ற அருட்பாவின் பொருளுக்கேட்ப மக்கள் இன்பமாக வாழ்ந்தார்கள்.

இன்ப வாழ்க்கை, அன்பு வாழ்க்கை, அமைதி வாழ்க்கை அன்று வாழ்ந்த மக்களுக்கே கிடைத்தது. இதனால் நாடு நலம் பெற்றது. வளம் பெற்றது. என்றும் இன்பம் நிலவும் நாடாக சிறப்படைந்தது.

அந்தோ பரிதாபம் இன்று அந்நிலையைக் கற்பனையில் கூடக்காண முடியாத நிலை சாதி, சமய, மொழி இனக்கண்ணோட்டம் உள்ள நாடாக நமது நாடு மாறிவிட்டது. இந்த இழிநிலை ஏற்படக் காரணமாய் இருந்தவர்கள் தான் இந்த துர்ப்பாக்கிய செயலுக்கான காரணகர்த்தாக்கள் இவர்கள் நான் எனது என்ற கீழ்த்தரமான சிந்தனையை மாற்றி நாம், எமது என்று சிந்தித்திருந்தால் இந்த நாடு மனிதம் வாழ்கின்ற ஆன்மநேய ஒளிபெற்ற உயர் நாடாக அமைந்திருக்கும்.

பல்லாண்டுகாலம் இருளும் ஒரு நாள் ஒளியும் போல் போர்க்காலச் சூழலும், சமாதானமும் எம் நாட்டில் நிலவுகின்றது. அகதி நிலை வாழ்க்கையில் மக்கள் படும் துன்பம் சொல்லில் அடங்காது. சமாதானம் என்பது வராதா ? என்ற அங்கலாய்ப்பிலேயே மக்கள் பீதியான வாழ்க்கையை வாழ்ந்து கொண்டுள்ளார்கள்.

மக்களைப்பற்றி, சமூகத்தைப்பற்றி, அமைதி, சமாதானத்தைப்பற்றிய சிந்தனை உள்ளவர்கள். அனைவரும் திரண்டால் போர்க்காலச் சூழ்நிலைக்குக் காரணமானவர்களை அமைதிப்படுத்தி எண்ணத்தை மாற்றிச் சமாதானத்தைக் கொண்டு வரலாம் என்ற நம்பிக்கையை நாம் இழக்கக்கூடாது. இன்று எமது நாட்டுக்கு நாட்டு மக்களுக்குத் தேவை சமாதானம். என்ன விலை கொடுத்தாவது இதைப் பெற வேண்டுமென்ற உணர்விலேயே மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள்.

சமாதானத்தைப் பெற ' திரண்டெழுவீர் இலங்கையரே '' என்ற அழுத்தத்தைக் கொடுப்பதுதான் சிவநெறியின் இன்றைய தலையாய பணி ஆகும். எல்லோரதும் பிரார்த்தனைகளும் சமாதானத்தை, அமைதி வாழ்வை வேண்டுவதாகவே அமையட்டும்.

— ஆசிரியர் —

---

## ஆள் பாதி -- ஆடை பாதி

காஷாய (காவிநிறம்) நிறமுள்ள ஆடை அணிவது அறிவை வளர்க்கும். இது குளுமையானது. பித்தத்தைப் போக்குகிறது. இதைக் கோடை நாட்களில் அணியவேண்டும். மிகவும் இலேசாக இருக்கும் காஷாய வஸ்திரமே சிறந்தது (துறவி காஷாய வஸ்திரத்தை அணிவதன் நோக்கம் இதுதான்.)

வெண்மை நிறமுள்ள ஆடை மங்களகரமானது குளுமையையும் வெப்பத்தையும் நீக்குகிறது. வெப்பத்தையும் குளிர்ச்சியையும் உண்டுபண்ணுவதில்லை. இதை மழைக் காலத்தில் அணிய வேண்டும்.

தூங்கும்போதும், வெளியே போகிற போதும், பூஜை பண்ணுகிற சமயத்திலும், தனித்தனியே புதிதான துவைத்த ஆடைகளையே அணிய வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலக இன்பத்திற்கு ஒரு வழியுண்டா?

— ரா. ராஜேஸ்வரக் குருக்கள் —

உலகத்தில் யாரானாலும் சரி ஒருவர் மற்றவ ரிடத்தில் எதை விரும்பினாலும் விரும்பாது போனா லும் சரி அவர் மற்றவரிடம் நிலையாக விரும்புவது எதிர்பார்ப்பது ஒன்றே ஒன்று அதுவே ' அன்பு '

இதற்கு காரணமும் இருக்கிறது. என்ன காரணம்? அன்பு ஒன்று இருந்தாலே அவரிடமிருந்து எது எப் போது வேண்டினாலும் தடையில்லாமல் பெற்றுக் கொள்ளலாம் அல்லவா ? வள்ளுவப் பருமானாரும் ' அன்புடையார் என்பும் உரியர் பிறர்க்கு ' என்று இந்த உண்மையைக் கூறியுள்ளாரே.

எல்லார்க்கும் எல்லாம் அருளவல்ல கடவுளை அன்பு உருவில் காண்பதுவும் இது கருதித்தானோ? இந்த அன்பு ஒன்றே உலக மக்கள் அனைவரையும் ஒன்றுவிக்கும் உயர்சாதனமாக உள்ளது.

ஆகவே அன்பே கடவுள் என்பதும் அன்பே சிவம் என்பதும் எவ்வளவு பெரிய சிறந்த உண்மை யாகிவிடுகிறது. இந்த அன்பாகிய கடவுள் உணர்வு உலகமக்கள் அனைவரிடமும் அமந்துவிடுமானால் உலகம் இன்பமயமாகவே இருக்கும் என்பதில் என்ன ஐயம் ?

வறுமையே நாட்டில் இருத்தலாகாது என்பது எல்லார் விருப்பமும், முயற்சியும். ஆனாலும் செல் வர் ஒரு பக்கமும் வறியவர் ஒரு பக்கமும் இருந்து கொண்டேயிருக்கின்றனர். அதனால் நாட்டில் ஒரு பக்கம் இன்பம். ஒரு பக்கம் துன்பம் இரண்டும் உலகத்தில் காணப்பட்டே வருகின்றன. இந்த வேறு பாடு தீர வழியாது ? சட்டத்தால் இதனைத் தீர்த்து விட முடியுமா ? முடியாது. எத்தனை முயன்றும் முடியவில்லையே.

அப்படியானால் இதற்கு வேறு வழியே இல்லையா இருக்கிறது.

செல்வர் எல்லாருமே அன்பில் விளங்குபவராய் இருக்கின்றனர் என்று வைத்துக்கொள்வோம். ஆற் றில் தண்ணீர் மிகுந்துவிட்டால் வழிந்தோடுகிறது பார்க்கிறோம். அதுபோல அன்பு மிகுந்து விளங்கி னால் அது அருள் வடிவில் பிறரிடம் வழிந்தோடும். அப்போது செல்வம் உடையார் செல்வம் இல்லா தார் துன்பம் கண்டால் பொருத்துக்கொண்டிருப் பாரோ ? இருக்கமாட்டார். அவரால் அப்படி இருக்க முடியாது. இல்லாதார் துன்பத்தை உடனே துடைக் கத் தம்மிடம் உள்ள செல்வத்தை வேண்டும் அளவு கொடுத்து உதவுவார். அதனால் அவர் துன்பம் நீங்கி மகிழக்கண்டு தாமும் மகிழ்வார். ஈத்து உவக் கும் இன்பம் ' என்று இந்த இன்பத்தைத் திருக் குறள் சிறப்பித்துக் கூறுவது அறிவோம்.

ஆகவே செல்வம் படைத்தோர் எல்லாரும் அச் செல்வத்தால் பிறர்க்கும் பயன்படுவாராக இருத்தல் வேண்டும். ' செல்வத்துப் பயனே ஈதல்' என்று புலவர் நக்கீரர் கூறியது உண்மை உரையல்லவா?

நம்முடன் பழகியவர் பலரில் சிலரில் சிலவேளை களில் நம்மிடமே தகாதவற்றைச் செய்து விடலாம். தகாதவற்றைப்பேசி விடலாம். அப்பொழுது இயல் பாக நமக்குக் கோபதாபங்களும், வெறுப்பும் உண்டாகும். ஆனாலும் ஓர் அனுபவம் நமக்குத் தெரியும்.

செய்தவர், சொன்னவர் நமக்கு பழக்கமானவர் ஆயிற்றே. அந்த உணர்வு நம்மிடம் உண்டாகிறது. அதனால் அவர்மேல் உண்டான கோபதாபங்கள் நீங்குகின்றன. ஏதோ பழகினவர் ஆயிற்றே என்ற உணர்வோடு நாம் பொறுத்துக் கொள்கின்றோம். இந்த பண்புடைய செயலைக் ' கண்ணோட்டம் ' என்று பெரியவர் சொல்லுவார். இதன் பயனாக என்ன ஆகிறது ? நம் மனத்திலும் வேதனை நீங்கு கிறது. தெய்தவரும், சொன்னவரும் நமது நடை முறையைப்பார்த்து உணர்வு பெறுகின்றனர். நம்மீது அன்பு கொள்ளுகின்றனர். இதனால் இருவரிடையே யும் இன்பம் பெருக்கெடுக்கிறது. இப்படி எல்லார் இன்பத்திற்கும் ஏதுவான ' கண்ணோட்டமும் ' மனித வாழ்க்கையில் தேவைப்படுகிறது.

வீட்டில் சிலவேளை பிள்ளைகள் எதையாவது திருடிவிடுகின்றனர். நாம் வேண்டும்போது அந்தப் பொருளைத் தேடுகிறோம் கிடைக்கவில்லை. எல்லா ரிடமும் வினவுகின்றோம். எடுத்தவனும் அங்கே இருக்கிறான் தான் எடுக்கவில்லை என்று பொய் சொல்லுகிறான். இதனால் நமக்கு மகிழ்ச்சியோ ? இல்லை. யாரும் எடுக்காதபடி எப்படி அப்பொருள் காணாமற்போகும் ? மனம் வேதனைப்படுகிறது. நம் மனவேதனையைப் பார்த்து திருடிய பிள்ளை உணர் கிறான். உண்மையைச் சொல்லிவிட வேண்டுமென்று

(தொடர்ச்சி 12ம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுவாமி சிவானந்தர் அருள் வாக்கு

மௌன விரதம் என்பது மிதமாகப்பேசுதலே மௌன சாதனை. குறைவாகப் பேசுதல் வேண்டும். இனிமையாகப் பேசுதல் வேண்டும். ஆண்டவன் கொடுத்திருக்கும் ஒரு அருமையான திறமையாகிய பேசும் திறனை சரியாக உபயோகப்படுத்தாததால், மற்றவர்களுடன் ஆன்மீக விஷயங்களை விவாதிக்கும் வாய்ப்பையும், அதன் மூலம் உங்களுக்குக் கற்றுக்கொள்ள ஏற்படும் சந்தர்ப்பங்களையும் இழக்கின்றீர்கள். ஆண்டவனின் குழந்தைகளுக்கு சேவை செய்யும் பல வாய்ப்புக்களையும் நீங்கள் இழக்கின்றீர்கள். சிலருக்கு உற்சாக வார்த்தைகள் ஒன்றிரண்டு. சிலருக்கு ஆறுதல் அளிக்கும் செய்தி சிலருக்கு நல்வாழ்த்து என்று கூறினால் எவ்வளவு இன்பத்தை நீங்கள் பிறரிடம் உண்டாக்கலாம். இது ஓர் பேரிழப்பு. இந்த பேசாது இருக்கும் மௌனம் விடப்படவேண்டும். தான் எவ்வளவு மௌனவிரதம் இருக்கிறோம் என்றே சிலருக்குத் தெரியாது. யாரோ மௌனமாக இருந்தார்கள் எனவே அவரைப் பின்பற்றி மற்றவர்களும் மௌனவிரதம் இருக்கிறார்கள். இவர்கள் பேசமாட்டார்கள். ஆனால் இரண்டு நிமிடத்தில் பேசிபுரிந்து கொள்ளும்படிச் செய்யக்கூடிய விஷயத்தைப் புரிந்துகொள்ளச் செய்ய பல மணி நேரங்களை வீணடிப்பார்கள். அவர்கள் வாயால் பேசமாட்டார்கள். ஆனால் அவர்கள் மனத்தில் ஓயாது அர்த்தமற்ற பேச்சுக்கள் நிகழ்ந்து கொண்டே இருக்கும் பேச்சைச் கட்டுப்படுத்துவதே மௌனம். குறைவாகப் பேசுவதே மௌனம்.

தொகுப்பு — க. கனகராசா
ஆதாரம் - '' சிவானந்தர் அருள் வாக்கு ''

## ஆலயத்தில் அடியார்கள் அனுசரிக்க வேண்டுகின்றோம்

1. அகத்தோடு புறத் தூய்மை அவசியம் என்றுணர்ந்திடுக.
2. ஆண்டவனின் நினைவன்றி அவ நினைவைத் துறந்திடுக.
3. இல்லம் போல் வீதிகளில் எழில், சுத்தம் பேணிடுக.
4. ஈசனது சந்நிதியில் இரைச்சலின்றி வணங்கிடுக.
5. உயர்த்துகின்ற கைகளினால் மறையாது தொழவிடுக.
6. ஊர்வம்பு பேசாது ஒருமையுடன் வழிபடுக.
7. எவ்விடத்தும் மனங்கனிந்து இறை புகழே ஓதிடுக.
8. ஏகும்போது அடியாரை நெருக்கிடுதல் விடுத்திடுக.
9. ஐயனது தீர்த்தத்தை அசுத்தப்படுத்தற்க.
10. ஒருவர்க்கும் இடையூறாய் இருப்பதனைத் தவிர்த்திடுக.

'' எண்ணி இவை கடைப்பிடித்தால் எத்தீங்கும் எவர்க்குமில்லை ''

'' மில்க்வைற் ''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பக்தவத்ஸலம்

— ஸ்ரீமத் சுவாமி தந்திரதேவா —

எல்லா ஜீவராசிகளிலும் எந்தச் சமயத்தைச் சேர்ந்தவர்களானாலும் நேசம் காட்ட வேண்டும். ஆயினும் எல்லாச் சமயத்தத்துவங்களிலும் சமத்துவம் அமையப்பெற்றுள்ளது பாதைகள் செல்கின்றன அவைகள் எல்லாம் நாம் போகவேண்டிய இடத்திற்குப் போய்ச்சேரும் என்று சொல்ல முடியுமா? போக வேண்டிய இடத்திற்கு செல்லமுன் சாரதி பாதை பற்றி ஆராய்வார் அதன் பிறகு சரியான பாதையில் பிரவேசிப்பார் இதைப்போன்று உபநிஷதங்களில் சரியான பாதை மனிதனுக்கு காட்டியுள்ளது. இது சனாதன தர்மமாகும். இப்பாதை மறுபிறப்புத்தத்துவம், கர்மவினைத் தத்துவம் மோக்ஷா தத்துவம் என்பன அடங்கியுள்ளது எந்த ஒரு சமயத் தத்துவமும் மறுபிறவிக்கொள்கையில்லா விட்டால் அந்தச் சமயப்பாதை தவறானது. உண்மையானவேதாந்தத்தில் எல்லாச் சமயத் தத்துவங்களும் சமத்துவம் என்பது கொள்கையல்ல. உபநிஷதங்கள் காலத்தில் (வேதாந்த தத்துவம் உருவாக்கப்பட்ட காலத்தில்) இந்துசமயம் தவிர்த்து தற்போதுள்ள மேல்நாட்டுச் சமயங்கள் உருவாக்கப்படவில்லை. ஆகவே உபநிஷதங்கள் மேல்நாட்டுச் சமயங்களை ஆதரிக்கின்றது என்பது இயலாது அத்துவைத வேதாந்த தத்துவம் சொல்கிறது ஒரேயொரு ஆன்மா எல்லா உயிர்களுள்ளும் உள்ளது நிறைய ஜென்மங்களுக்குப் பின்வேறு உடல்களோடு வேறு, வேறு பாசை பேசுகின்றது, வேறு, வேறு இனங்களில் சேர்க்கப்படுகின்றது, வேறு, வேறு சமயங்களைக் கடைப்பிடிக்கின்றது. வேறு, வேறு கர்மவினைச் சூழ்நிலைகள் அனுபவிக்கின்றது. எனவே எல்லா ஜீவராசிகளுக்கும் அன்பு கருணை என்பவற்றை ஒரு குடும்பம்போல் காட்ட வேண்டும்.

எங்கள் சமயம் ஒரு மூன்று மாடிக் கட்டடம் போன்றது. எல்லோரும் இதை ஏற்றுக்கொள்வார்கள். ஒரு சக்தி வாய்ந்த கட்டடத்திற்கு ஒரு பலமான அத்திவாரம் முக்கியமானதாகும். செலவைக் குறைக்க வேண்டுமென்பதற்காக அத்திவாரத்தை தவிர்ப்போம் என்பது முடியாத கொள்கையாகும். பலமான அத்திவாரம் தவிர்க்கமுடியாது அத்திவாரம் இல்லாமல் முழுக்கட்டடமும் விழுந்துவிடும். (இதுபோன்று) எங்கள் சமயச்சடங்குகளுக்கு அத்திவாரம் என்ன? அது அன்பு, நேர்மை, உண்மை, ஒழுக்கம் என்பவைதான். கட்டட அத்திவாரம் போட மணல், சீமெந்து, கல், ஜலம் என்பன தேவையென்பது சரி. எங்கள் சமயக்கட்டடம் கட்டுவதற்கு அன்பு, நேர்மை, உண்மை, ஒழுக்கம் என்பன தேவைப்படுகின்றது. இந்த அடிம்படையில் மட்டும் நாங்கள் திருகோயில்களிலே வணங்குகின்றோம். ஆச்சிரமங்களுக்குச் செல்கின்றோம். சமுதாயத்திற்கு சேவை செய்கின்றோம் இவ் அத்திவாரம் மீது முதலாம்மாடி பக்தியோகம், அதாவது சகுண வழிபாடு இறைவனுடைய புனித உருவங்களைத் துதி செய்ய வேண்டும். கோயில்களுக்கு சமயப் பெரியவர்களுக்குத் தொண்டு செய்ய வேண்டும். இரண்டாவது மாடி என்பது என்ன? கர்மயோகம் நல்ல இதயத்துடன் மனித சமுதாயத்திற்குத் தொண்டு செய்ய வேண்டும். மூன்றாவது மாடியென்பது என்ன? ஞானம் அநேக ஜென்மங்களுக்குப் பின் குறிப்பிட்ட ஜன்மத்தில் ஞானம் பெற்றுக்கொள்ளலாம் இம் மூன்று மாடிக்கட்டடத்தின் மேல் சிகரம் என்பது மோட்சம்.

சிலர் 'இருக்கின்றார்கள் அவர்கள் பக்தர்கள் மீது கேலி செய்கின்றார்கள். அதாவது மேல்நாட்டுக்காரர்கள் சந்திரகிரகத்தையே சுற்றுகிறார்கள். ஆனால் எங்கள் மக்கள் இன்னும் கோயிலையே சுற்றுகிறார்கள். இதைப்பற்றி கொஞ்சம் நாங்கள் ஆராய வேண்டும் சந்திர மண்டலத்தில் முதலாவது பிரவேசித்தவர் யார்? நீல் ஆம்ஸ்ரோங் இப்பெரிய விஞ்ஞானியானவர் பூமிக்குத் திரும்பியபின் அவர் தன்னுடைய வாழ்க்கையில் சில சமுதாய குடும்பப் பிரச்சனையில் மூழ்கிவிட்டு குடிப்பழக்கத்தைத் தொடங்கி ஒருகாலம் மனநோய் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டார். ஆகவே விஞ்ஞான ரீதியான சாதனைகள் வேண்டாம் என கூறவில்லை எனினும் இச்சாதனைகள் மட்டும் தானாகவே மன அமைதியைத் தரமாட்டாது, ஆனால் நல்ல பக்தகோடிகள் ஆலய பிரதஷ்ணையிலிருந்து மனச்சாந்தி அடைவார்கள்.

இக்காலத்தில சிலர் நினைக்கின்றார்கள் இது நவீனகாலம் ஆகவே சமயபக்தி தேவையில்லை என்று, ஆனால் அவர்கள் நினைக்கவில்லை விஞ்ஞான நன்மைகளோடும் கூட ஆன்மீக பிரக்ஞை, மற்றும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புனிதலோகங்கள் மனச்சாந்தி, தூய்மையான கலாச்சாரம் என்பன காட்டமுடியும் என்பதை, எனவே சில விஞ்ஞான ரீதியான முன்னேற்றங்களை நாங்கள் உபசரிக்கின்றோம். ஆயினும் விஞ்ஞான மூலம் மட்டும் மனித சமுதாயத்திற்கு அமைதி வரும் என்று சொல்வது மிகத் தவறானதாகும். ஒவ்வொரு பள்ளிக்கூட மாணவனுக்கும் தெரியும் இந்நூற்றாண்டில் தலை சிறந்த விஞ்ஞானி அல்பட் இந்ஸ்தீன் என்பவரென்று அவர் அணு சக்தியைக் கண்டுபிடித்தார். அத்துடன் அநேக புகழ்மிக்க விஞ்ஞான சாதனையாளராகத் திகழ்ந்தார். ஆயினும் இந்ஸ்தீன் ஒரு ஆன்மீக பிரக்ஞை விசுவாசியாகும். இப்பெரியவர் 'ஓய்வு கொள்ளும் நேரங்களில் பகவத்கீதை வாசித்துள்ளேன்' என்றும் இவ் திவ்விய தத்துவ மூலம் மனச்சாந்தி பெற்றேன் என்றும் கூறினார் ஆகவே உலக தலைசிறந்த விஞ்ஞானியின் இதயத்தில் சமயம் மற்றும் பகவத்கீதை பற்றி இவ் உயர்ந்த அபிப்பிராயம் ஏற்படும்போது இங்கே ஒரு மனிதன் விஞ்ஞான காலத்தில் சமயம் தேவையில்லையென்று கூறமுடியுமா? இக் கேள்வியோடு நான் யார்? விமோசனம் என்பது என்ன? போன்ற கேள்விகளும் மனிதனுக்கு எக்காலங்களிலும், எல்லாயுகங்களிலும் உகந்ததாகவுள்ளது.

1935ம் ஆண்டுக்கு முன்பே ஜேர்மனி நாட்டில் சிறந்த அளவு பொருளாதார முன்னேற்றம் ஏற்பட்டிருந்தது சுரங்க றெயின்கள் அநேகமான தொலைத்தொடர்பு வசதிகள் முதலியன முன்னேற்றம் அடைந்திருந்தது. அதனால் அந்தக்காலம் ஜேர்மன் நாட்டு மக்கள் திருப்தி அடைந்தார்களா? இல்லை. அடோல்ப் ஹிட்லரின் சர்வாதிகார ஆட்சியின் கீழ் அக்கால ஜேர்மனிய மக்கள் இரண்டாவது உலகப் போரை ஆரம்பித்தார்கள். இப்போர் மூலம் அநேக கொடூரமான செயல்கள் மற்றும் உலக அழிவுகள் நடைபெற்றன. ஆகவே பொருளாதார முன்னேற்றம் மட்டும் மனித சமுதாயத்திற்கு நிலையான மனச்சாந்தியைத் தரமாட்டாது எல்லாக்காலங்களிலும் எல்லாப் பூலோகச் சூழ்நிலையிலும் ஆன்மீக சமயசம்பந்தமான கோட்பாடுகள் காப்பாற்றப்படவேண்டும். இல்லாவிட்டால் மனித சமுதாயம் குறுக்கு வழியில் போவார்கள்.

சில சமயங்கள் அவைகளுடைய தத்துவரீதியாக நிலையான நரகம் பெறமுடியும் என்று கூறுகின்றன. அதாவது பூலோகத்தில் செய்த பாவங்களுக்கு ஏற்றவாறு இறைவன் தண்டிப்பார் ஆனால் இந்துசமயம் அவ்வாறு கூறவில்லை. ஒவ்வொரு மனிதனுக்கும் அவர்களுடைய கர்மவினைப்பயன் ரீதியாக இந்த ஜென்மம், அடுத்த ஜென்மம், மற்றும் ஜென்மங்கள் என்று இப்பலன் ஏற்றுக்கொள்ளப்படும். எத்தண்டனையைக் கடவுள் கொடுத்தாலும் பின்பு அதுசம்பந்தமான பாவங்களுக்கு அவர் மன்னிப்பு தருவார் இவ்விதி சிறைச்சாலை தண்டனையைப் போன்றது மனிதனுடைய உண்மையான நிலை புனிதமானது இதை அத்துவைத ரீதியாக உபநிஷதங்கள் தத்துவங்கள் என்பன சுட்டிக்காட்டியுள்ளன. மனிதனுக்கு கடவுளில் இருக்கும் நேசம் காரணமாக ஜீவாத்மாவுக்கு ஒருபோதும் நிலையான நரகம் கொடுக்கமாட்டார். இதற்கு உதாரணம் இவ்வாறு ஒரு விளக்கம் கொடுக்கலாம். வீட்டில் ஒரு குழந்தை குழப்படி செய்தால் தாய் அந்த குழந்தையை தண்டிக்க வேண்டியதன் காரணமாக நிலையான தண்டனையாக எரியும் அடுப்பில் வைக்கமாட்டாள். தாய் எந்த தண்டனையென்றாலும், ஏசுவாள் அல்லது கன்னத்தில் அறைவாள். ஆயினும் சிறிது நேரத்தின் பின் அன்புடன் மீண்டும் அக்குழந்தையை அணைப்பாள். மனித சமுதாயத்திற்கு கடவுளின் அன்பும் இவ்வாறுதான். இவ்விதமான நிலையான நரக சமயத்தத்துவங்களை நாங்கள் ஒருபோதும் நம்பவேண்டாம். கடவுளின் கருணை அப்படியில்லை.

நாங்கள் பேருந்து மூலம் பிரயாணம் செய்யும் போது 'நான் இந்த பேருந்து' என்று சொல்ல மாட்டோம். அதனுள்ளே உட்காருகின்றோம். பேருந்து மூலம் பிரயாணம் செய்கின்றோம். இது போன்று நாங்கள் ஸ்தூல சரீரம் இல்லை எங்கள் இவ்வுடல் ஜீவராசியுடைய வாகனம்தான்.

புத்தபெருமான் மகாவிஷ்ணுவின் அவதாரம் என்று கருதப்படுகிறது. புத்தசமயத்தின் தத்துவங்கள், பிரதான அம்சங்கள் உபநிஷதங்களில் இருந்து வந்தது. இந்துசமயம், பௌத்த சமயம் ஆகியவற்றினால் மறுபிறவி கர்மவினை தத்துவங்கள் மற்றும் மௌனதியானம் என்பவற்றின் சாதனைபற்றி அங்கீகரிக்கப்பட்டுள்ளது கௌதம புத்தரின் செல்வாக்குக் காரணத்தால் இக்காலத்தில் இந்துயாகங்கள் மற்றும் மாமிசபலி என்பவற்றை தவிர்க்கத் தொடங்கினார்கள். மேலும் மாமிசம் உண்ணும் பழக்கம் புத்தரின் பிரச்சாரத்திலிருந்து வேகமாகக் குறைந்துவிட்டது.

கடவுளுக்கு இரண்டு அம்சங்கள் உள்ளன. ஒன்று நிர்குணப் பிரம்மம், அதாவது கடவுள் உருவம் அற்ற நிலை. மற்றது சகுணப் பிரமம், கடவுளின் உருவத்துடனான நிலை. தேஜோப நிஷதத்தில் சிவன் சொல்கிறார்; எனக்கு உருவம் இல்லை. மனிதனுக்கு வழிபாடு சந்தர்ப்பம் காரணமாக கடவுள் புனித உருவங்களோடு தோன்றுகின்றார். பிரம்ம ஞானிகள் ராஜயோக மூலம் நிர்குணப் பிரம்மம் அநுபவிக்கின்றார்கள். சகுண வழிபாடு என்பது பக்தியோடுள்ள பாதை அதாவது கடவுளுடைய புனித உருவங்கள் அவதாரங்கள், அவதார புருஷர்கள், முனிவர்கள், முதலியர்கள் கலி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யுகத்தில் பொதுவாக இப்பத்தியோக பாதை மிக உகந்தது எனக் கருதுகின்றனர். ஸ்ரீமத் பாகவதத்தில் இதுபற்றி குறிப்பிடப்பட்டுள்ளது. கலியுககாலத்தில் இப்பக்தியோகப்பாதையில் கடவுளுடைய புனித பாடல்களைப் பாடுதல் அத்துடன் நல்ல குணங்களோடு வாழ்க்கை நடாத்துதல் மூலம் முத்தி அடையலாம்.

மேல்லோகங்களில் எல்லாம் புனிதமானதாகும். அசுத்தமான நிலை இருக்காது. ஆனால் பூலோகத்திலே கோயில்கள் ஆச்சிரமங்கள் ஸ்தாபிக்கவேண்டும். இப் புனித பீடங்கள் மேல்லோகத்திற்கு செல்வதற்கு உதவும் கருவி மாதிரியாகும். ஔவையார் சொன்னார் கோயில் இல்லாத ஊரில் குடியிருக்க வேண்டாம் என்று காரணம் என்னவென்றால் கடவுள் பக்தியில்லாத வாழ்க்கை ஒரு மிருக வாழ்க்கை போன்றது. ஆக வ பூலோகத்தில் தூய்மையான இடங்கள் வேண்டும். அப்போதுதான் பூஜை, பஜனை மௌனதியானம் போன்ற காரியங்களில் ஈடுபடலாம். ஆச்சிரம வாழ்க்கை சில குறிப்பிட்டவர்களுக்கு உகந்தது. ஆனால் கோயில் வழிபாடு எல்லா மக்களுக்கும் அவசியமானது. மேலும் பூலோகத்தில் சுத்தமான சூழலை உருவாக்கி காப்பாற்ற வேண்டும். சுகாதாரக் கொள்கைகளை பேணாத ஊர் ஒரு நரகக் காட்சிபோல் தெரியும் மனசுத்தம் தேவை என்பதை ஏற்றுக் கொள்வதைப் போல ஊர் சுத்தமாக இருக்க வேண்டும் என்பதை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

கடவுளுடைய புனித நாமங்களைச் சொல்வதற்கு நாங்கள் வெட்கப்படவேண்டியதில்லை. பஜனைகள் மற்றும் ஆலய மணியோசை போன்றவை மனிதனை காப்பாற்றும். ஆயினும், சில ஆட்கள் கடவுளின் புனித நாமப்பாடல்களைப் பாட விரும்புவதில்லை. ஆனால் இவர்கள் ஆபத்துக்கள் நேர்ந்த வேளையில் பாதுகாப்புத் தேடி உடனடியாக கடவுளே என்று கத்திக்கொள்வார்கள்

ஒருவர் இருந்தார், அவர் தன்னை ஒரு பக்தி மனமுடையவன் என்று கூறினார். ஆயினும் எனக்கு கோயிலுக்குப் போக நேரமில்லை என தொடர்ந்து சொல்லிக்கொண்டே இருந்தார். கடைசியாக ஒரு நாள் இயமன் இவனைத்தேடி வந்தார். அங்கு இவனை இயமன் அழைக்க அவன் கூறினான் ' ஐந்து நிமிடம் பொருங்கள் நான் கோயிலுக்குப் போய் வருகிறேன் ' என்று.

எங்கள் பூலோக வாழ்க்கை என்பது வெளிநாட்டு பிரயாணம் போன்றது. ஒரு குழந்தை பூலோகத்தில் பிரசவிக்கும்போது அழுகிறான், கத்துகிறான்; பல வருடங்களுக்குப் பின் அவன் இறந்தும் அவனுடைய சவப்பெட்டியை சுற்றி சுற்றி ஐயோ பூலோகத்தில் இருந்து போகின்றானே என்று அழுகின்றனர், கத்துகின்றனர் இதுதா.ன் உலக வாழ்க்கை

இரவினில் ஒருவர் கனவு காணும்போது இது கனவு உண்மையில்லையென உணர்ந்துக்கொள்ள சுயநினைவு இருக்காது. நித்திரை விட்டெழுந்த பின் அது உண்மையில்லை, கனவு என்று நினைவு வரும். இதுபோன்று இவ்வுலகம் உண்மையென மனிதன் கனவு காணுகின்றான். ஆனால் இவ்வுலகம் உண்மையில்லையென ஞானிகள் புரிந்து கொள்கின்றனர்.

ஒரு மனிதன் வாழ்க்கையில் சகல அம்சங்களும் கர்மவினையின்படி நடைபெறுகின்றது. இதயத்தை தூய்மைப்படுத்த முயற்சி செய்யாமல் தேங்காய், பால் போன்ற பொருட்களை அர்ச்சித்தல் மூலம் கடவுளுக்கு லஞ்சம் கொடுக்க முடியாது. சிலர் குறிப்பிட்ட மாதிரி நேர்த்திக்கடன் செய்கின்றார்கள். தெய்வ சந்நிதானத்தில் கடவுளை நோக்கி நீ கொடுத்தால் நான் தருவேன். நீர் தராவிட்டால் நான் தரமாட்டேன் என்பது ஒரு தரமற்ற வழிபாட்டு முறையாகும். எல்லாச் சிருஷ்டிகளுக்கும் கடவுள் உரிமையாளராகும். உதாரணமாக உலகத்தில் எல்லாத் தென்னை மரங்கள். தேங்காய்கள், இறைவனுடைய உரிமையாகும். ஆயினும் சில பேர் கருதுகிறார்கள் கடவுளுக்கு மனிதன் சமர்ப்பிப்பதற்கு பாதி தேங்காய் தேவையென. அபிஷேக பொருட்கள், தேங்காய் முதலியன சமர்ப்பிக்க வேண்டும். ஏனெனில்; பக்தர்களில் இதயத்தை சுத்தம் செய்வதற்காக எமக்கு மனச்சாந்தி கிடைக்கவே. ஆனால் கடவுளுக்கு அவைகள் தேவையில்லை. நாங்கள் கடைக்குப் போனால் அரிசி, சீனி என்பன வாங்கும் போது கடை உரிமையாளர் என்ன சொல்வார்? காசு கொடுத்தால் சாமான் தருவேன் காசு இல்லாவிட்டால் பொருட்கள் தரமாட்டேன். இவ்வாறு பக்தியில் செய்ய முடியுமா? இல்லை இவ்வாறு நாங்கள் கடவுளுடன் பண்டமாற்று செய்ய வேண்டாம். மனிதனுடைய கடவுள் விசுவாசம், கடவுள் பக்தி அசையாமல் இருக்க வேண்டும் எல்லாச்சூழ்நிலைகள் மத்தியிலும் ஜீவன்கள் அவர்களுடைய ஆற்றல்கள் வரை கோயில்களுக்கும், ஆச்சிரமங்களுக்கும், மற்றும் சமுதாய நலன்காக்கும் ஸ்தாபனங்களுக்கும் வைத்தியசாலை, வித்தியாலயங்களுக்கும் உதவிகள் செய்ய வேண்டும். சிலர் நினைக்கின்றார்கள் தவறான குணங்கள், பொய் பேசுதல், பொறாமை, ஏமாற்றுதல் என்னும் கொடூரமான செயல்களைச் செய்துவிட்டு அர்ச்சனை, அபிஷேகம் முதலியவற்றைச் செய்தால் கடவுளின் அனுக்கிரகம் கிடைத்து விடுமென்று ஆனால் அப்படியில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆதி சங்கரர் இஷ்டதெய்வ தத்துவத்தை ஸ்தாபித்தார். அதாவது சிவன், சக்தி, விஷ்ணு, கணபதி, சுப்பிரமணியர், சூரியன் போன்ற தெய்வங்களை விரும்பிய வழிபாடாகும். இந்த உருவங்கள் எல்லாமே ஒன்றுதான். ஒரு மனிதன் வெவ்வேறு நேரங்களில் வேறு வேறு விதமான ஆடைகளை மாறி மாறி அணிகின்றான். ஆயினும் அம்மனிதன் ஒரே ஆளாகத்தான் இருப்பார். இந்துசமயத்திலும் ஒரேயொரு தெய்வம்தான் உண்டு ஆனால் பல உருவிலும் தோற்றமளிப்பார். சில சமயத்தில் சொல்கிறார்கள் உருவ வழிபாடு கூடாது என்று. ஆயினும் இந்த சமய பக்தர்கள் நெற்றியிலே உருவ வழிபாடு செய்கிறார்கள். கல், சீமெந்து கொண்டு வடித்த உருவங்கள் மற்றும் நெற்றியில் வைக்கப்பட்ட உருவங்கள் எல்லாம் மனதை ஒருமுகப்படுத்துவதற்கு அனுகூலமானவை.

கோயிலில் ஸ்தாபிக்கப்பட்ட திவ்விய உருவங்களை வெறும் கல்மட்டும் என்று நினைக்க வேண்டாம். கருங்கல்லுடன் சீமெந்து, மனல், ஜலம் என்பவற்றை மேசன் ஒன்று சேர்த்தால் பலமான கட்டடத்திற்கு அத்திவாரம் போடலாம். அதன்பின் அதைக்கருங்கல் என்று கூறமாட்டோம். கட்டட அத்திவாரம் என்றுதான் கூறுவோம். இதேபோன்று ஆகமசிற்பி கல்லிலிருந்து திவ்வியரூபம் உருவாக்கி அதன் பிறகு இவ்வுருவத்திற்கு ஆலய குருக்களால் ஆகம பிரதிஷ்டை செய்து கும்பாபிஷேகம் நடத்தினால் இவ்வுருவத்தை கல் என்று கூறமுடியாது. திவ்வியரூபம் என்றுதான் கூறமுடியும்.

ஒரு மனிதன் கொகாகோலா, பன்டா போன்ற குளிர்பானங்கள் குடித்தால் தாகம் நீங்கும் அதற்கு மேலான நன்மையெதுவும் கிடைக்காது ஆனால் அவர் பழரசம் அருந்தினாலும் தாகம் நீங்கும். அத்துடன் அந்த ரசத்திலிருந்து உடலுக்குப் புஷ்டியும் கிடைக்கும் ஆகவே கொகாகோலா போன்ற பானங்களை விட பழரசம் குடிப்பது நன்றாகும். இது போன்று ஒருவர் சினிமாப் பாடல்கள் கேட்டால் அப்பாடல்களை ரசிக்கலாம். ஆனால் அப்பாடல் முடிந்ததும் எவ்வித நன்மையும் கிடைக்காது அவர் பக்தி சம்பந்தமான சங்கீதப்பாடல்களை ரசிக்கலாம். தொடர்ந்து ஆன்மீகப் புஷ்டியும் பெற்றுக்கொள்ளப்படும் எனவே சினிமாப்பாடல்களைவிடப் பக்திப் பாடல்களைக் கேட்டால் நல்லது

ஏன் நாயின் பால் அசுத்தமானது என்று கருதுகின்றோம், ஆனால் இதேவேளை பசும்பால், ஆட்டுப்பால் சுத்தமானது, ஆரோக்கியமானது என்றும் கருதுகின்றோம் இது அந்த அந்த பிராணிகள் சாப்பிடும் முறையால் என்றுதான் கருதுகின்றோம் மாமிசம் உண்ணும் நாய் அசுத்தமான இரத்தம் சுரக்கின்றது. ஆனால் பசுமாடு, ஆடு போன்றவை இலைகள், புல்போன்ற உணவுகளைச் சாப்பிடுவதால் சுத்தமான இரத்தம் கிடைக்கின்றது சிலர் சொல்கிறார்கள் தான் வெள்ளிக்கிழமை தோறும் திருக்கோயிலுக்குச் செல்கிறேன் ஆகவே அன்றைய தினம் மாமிசம் உண்ணமாட்டேன் ஆனால் அவர்கள் என்ன செய்கிறார்கள்? விடியற்காலையில் எழும்பி ஸ்நானம் செய்கிறார்கள்; வெண்மையான வேஷ்டி அணிகிறார்கள் சைவ ஆகாரம் உண்ணுகிறார்கள், திருக்கோயிலுக்குப் போகிறார்கள் ஆலய வழிபாடு முடிந்ததும் அவர்களுடைய வீட்டிற்குத் திரும்பிச் சென்று நேற்று சாப்பிட்ட மாமிசத்தைக் கழிவறையில் கழிக்கிறார்கள் ஒருநாள் மட்டும் மாமிசம் சாப்பிடாமல் விடுவதால் சரீரம் தூய்மைப்பட்டது என்று சொல்லலாமா? சகல அசைவ உணவுகளையும் கைவிட்டால் நல்லது ஒருநாள் ஒரு பள்ளிக்கூட அதிபர் எல்லா மாணவர்களுக்கும் (அசம்பிளியில்) ஒன்றுகூடலில் சொன்னார் "எங்கள் ஊர்க் கோயிலில் தற்போது திருவிழா நடக்கின்றது. நாங்கள் பெரும்பான்மையாக சைவர்கள் இருக்கின்றோம். ஆகவே எங்கள் பள்ளிக்கூடப் பெயரால் ஒருநாட் பூசையை ஏற்றுக்கொள்ள வேண்டும். எனவே நாளை (அசம்பிளியில்) ஒன்றுகூடலில் இவ்விடயம் பற்றி ஆலோசிப்போம்" மறுநாள் அதிபர் இன்று நேற்று கூறியதுபோல் கோயில் திருவிழாப் பூசை செய்வோம்" என்று கூறி சில மாணவர்களை "நோக்கி தேங்காய், சர்க்கரை போன்ற பொருட்களை கொண்டு வாருங்கள்" என்றார் பூசை தினத்தன்று எல்லோரும் கோயிலுக்குச் சென்று சர்க்கரைப் பொங்கல் பொங்கினார்கள். ஒரு பெண் பிள்ளை தேவாரம் பாடினார் சில மாணவர்கள் மட்டும் பூசையைத் தரிசித்தார்கள். எல்லோரும் சாப்பிட்டு விட்டுத் திரும்பினார்கள். இதனால் என்ன நன்மையுண்டு? இது போன்றே பள்ளிக்கூடம் பள்ளிக்கூடமாகச் சரஸ்வதிபூசை நடக்கின்றது. ஆனால் எத்தனை மாணவர்கள் இக் கொண்டாட்ட காலத்தில் பஜனைகளில் கலந்து கொள்வார்கள்? பொதுவாகக் குறிப்பிட்ட பஜனை கோஷ்டி மேடையேறி கொஞ்ச நேரம் பாடுவார்கள் ஏனைய 99% மாணவர்கள் இவ் பஜனையை தொலைக்காட்சிபோல் (டிவி) வேடிக்கை பார்ப்பார்கள். இந்நிலை மாற்றப்படவேண்டும் எல்லா மாணவர்களும் சேர்ந்து பஜனைப் பாடல்கள் பாட வேண்டும் இவ்வாறு செய்வதே தரமான சரஸ்வதி பூசையாகும்.

சமயர்ச்சாரியர்கள், ஆழ்வார்கள், அருணகிரிநாதர், இராமலிங்கசுவாமி போன்ற பக்தியோக முனிவர்கள் தமிழில் பாடினார்கள், இது போன்ற மராட்டிப் பாஷையில் துக்கராம் நர்மதேவ், ஞானேஸ்வரர், நரசிம்மேற்றர், சுவாமிராம்தாஸ் ஆகியோர் பாடி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னார்கள். வங்காளி பாஷையில் ஸ்ரீ சைதன்னியர் அநேகமாக கிருஷ்ண பக்திப் பாடலகளைப் பாடினார். ஹிந்தி பாஷையில் துளசிதாஸ் முதலியவர் பாடினார்கள்.

சிலர் கேட்கின்றனர் கோயில் மூலஸ்தானத்தில் ஏன் தமிழ் மொழியில் அர்ச்சனை செய்ய இயலாது என்று, இதைக் கேட்கும் நபர்களுக்கு சிலநேரம் ஒரு தேவாரமோ, திருப்புகழோ கூடத் தெரியாமலிருக்கும், இந்து சமயம் ஒரு மகாசமுத்திரம் போன்றது இச்சமயத்தில் கோடி கோடி மக்கள் வெவ்வேறு பாஷை பேசுபவர்கள் இருக்கின்றார்கள். ஆகவே இதுபற்றிச் சற்று சிந்திக்க வேண்டும் தனிப்பட்ட தமிழ்ச்சமயமோ, தனிப்பட்ட தெலுங்குச் சமயமோ, தனியான வங்காளி சமயமோ ஸ்தாபிக்க முடியாது ஒரு இந்து உலகத்தில் எங்கே பிரயாணம் செய்தாலும் பிரார்த்தனை ரீதியாக பொதுப்பாஷை தேவை. எனவே சமஸ்கிருத பாஷை இவ்வேலையை செய்கின்றது. நால்வேதங்கள், உபநிஷதங்கள், பகவத்கீதை ஸ்ரீமத் பகவதம், பிரம்ம சூத்திரங்கள், உத்தவகீதை, சைவ ஆகமங்கள் என்பன சமஸ்கிருத மூலமே உள்ளன என்பதை நாங்கள் மறக்கவேண்டாம் இந்த நூல்களுக்கு மொழி பெயர்ப்புள்ளன. (உதாரணம் கம்பராமாயணம்) தமிழிலும் படிக்கலாம் சமஸ்கிருத அர்ச்சனை விளங்காது எனவே தெரிந்த பாஷையில் அர்ச்சனை வேண்டும் என்று சொன்னால் அதற்குப் பதில் என்பது வருமாறு சில சமஸ்கிருத அர்ச்சனை வடமொழி நாமங்களை சிறிது நேரத்தில் மனப்பாடம் செய்து அர்த்தங்களைப் புரிந்து கொள்ளலாம். ஆனால் நவீனகாலத்தில் திருவாசகம், தேவாரம், திருமந்திரம், திருக்குறல் போன்ற புனித தமிழ் நூல்கள் புரியாத பாஷைபோல் பெரும்பாலும் போய்விட்டது. இவைகளில் கருத்தாளமிக்க தமிழ் சொற்களும் உள்ளன. எனவே உதாரணமாக திருவாசகம் நவீன தமிழ் மொழிக்கு மொழிபெயர்த்து இனிமேல் இதுதான் திருவாசகம் என்று சொல்ல முடியுமா ? நிச்சயம் யாரும் சொல்லமாட்டார்கள். எல்லாக் கோயில்களிலும், ஆச்சிரமங்களிலும் தமிழ் மொழியில் பிரார்த்தனை நடைபெறுகின்றது. ஆகவே மூலஸ்தான பாஷையைப்பற்றி கவலைப்படுவதைத் தவிர்த்து உங்கள் பிள்ளைகள் தேவாரம், திருப்புகழ் முதலியவற்றை நன்றாகக் கற்றுக்கொள்வதைப் பார்த்துக் கொள்வது ஒரு நல்ல காரியமாகும்

சமஸ்கிருத மந்திரங்களைப் பொறுத்தவரை சரியான உச்சரிப்பு முக்கியமானது மந்திரப் படிப்பு தேவநகரி அல்லது கிரந்தம் எழுத்தில் படிப்பது நன்றாகும். தமிழ் எழுத்துக்களில் மந்திரங்கள் படிப்பது கூடாது அப்படித் தமிழ் எழுத்துக்கள் மூலம் மந்திரங்கள் படிப்பதானால் நல்ல குருகுலம் உச்சரிப்புகளைத் திருத்த வேண்டும். உச்சரிப்புக்கள் தவறாக இருக்குமானால் அம்மந்திரங்களின் சக்தி குறைந்து விடும். வேதங்களுள் மூன்று புனித உச்சரிப்புக்கள் உள்ளன. அவை ; ஓம் (பிரணவம்) தத் (நிலையான ஆத்மா) ஸத் (ஸத்தியாத்ம) அடிக்கடி சுலோகங்களுடன் கலந்துள்ளது காரணம் என்னவென்றால், உச்சரிப்புத் தவறானது எனும்போது இம்மூன்று புனித சத்தங்கள் மந்திரசக்தியைக் காப்பாற்ற உதவும் இக்காலத்தில் சில பூசாரிகளுக்குச் சரியான மந்திர உச்சரிப்புத் தெரியாது. சிவன் கோயில்களைப் பொறுத்தவரை ஸ்ரீ ருத்திர பாராயணம் பதினொரு புரோகிதர்கள் பதினொரு தடவைகள் ஜபிக்கவேண்டும். ஆனால் தற்காலத்தில் இப்புனித சம்பிரதாயம் அழிந்து போய்விட்டது. சில பூசாரிகள் மீசை வைத்துக்கொள்வார்கள். சில பூஜாரிகள் மேல்நாட்டுப்பாணியில் உடைகள் அணிந்து திரிவார்கள். சிலர் குடுமி கட்ட வெட்கப்படுவார்கள். சில பூஜாரிகள் சந்தியாவந்தன அனுஷ்டிப்பதில்லை. பிராமணர் அல்லது எந்தப் பூஜாரியும் சந்தியாவந்தனம் அனுஷ்டிக்காவிட்டால் அடுத்த ஜன்மம் நாயாகப் பிறப்பார்கள் என்று தேவிபாகவதபுராணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆலய பூஜாரிகள் நவீன உலக காரியங்களில்தான் ஈடுபடும் போது அவர்களின் பரம்பரைக்கடமைகளை மறக்க வேண்டாம் சாஸ்த்திரங்களின் படியென்றால் பிராமணப்பிள்ளைகள் ஏழு வயதுடன் உபநயனம் பெறல் வேண்டும் ஷத்திரியர்கள், வைஷ்யர்கள் சிறிது காலதாமதமாகவும் உபநயனம் பெற்றுக்கொள்ள முடியும், பூநூல் பிராமணர்கள் மட்டும் அணியலாம் என்பது தவறான கருத்தாகும். மாமிசம் சாப்பிடுபவர்கள் பூநூல் அணியக்கூடாது. இது போன்று மாமிசம் சாப்பிடுபவர்கள் உருத்திராக்கம், துளசி, சந்தனமாலைகள் அணியக்கூடாது.

சைவசமயத்தைச் சேர்ந்த பாண்டியராணி திருஞானசம்பந்தரையும், அப்பர் சுவாமியையும் மதுரைக்கு அழைத்தார் என்பது பெரியபுராணத்தில் கூறப்படும் சரித்திரம் பாண்டியராணி அழைத்த காரணம்; அவளுடைய புருஷன் (பாண்டிய மன்னன்) சமண சமயத்தைச் சேர்ந்து வைசகலாசாரத்தை அவமதித்துக் கொண்டிருந்தமையாகும். இவ் அழைப்பைப் பெற்றுக்கொண்டபோது அப்பர் சுவாமிகள் கூறினார் கிரகநிலை சரியில்லை தற்போது போக வேண்டாம் என்று திருஞானசம்பந்தரோ கோளறு திருப்பதிகம் பாடி அதன் மூலம் பதிலளித்தார். சிவபெருமான் அவர்களுடைய பக்தர்களைக் காப்பாற்றுவார் அவர்களுடைய கிரக நிலையைக் கவனிக்கத் தேவையில்லை. எனக்கூறி திருஞானசம்பந்தர் தனியாக மதுரைக்குச் சென்றார். அங்கு சமண குரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மார்களுடைய அதிபயங்கரமான சோதனைகளைச் சந்தித்தார். ஆயினும் திருஞானசம்பந்தன் ''மந்திரமாவது நீறு'' பதிகம் பாடி பாண்டிய மன்னனுக்கு வெப்பு நோயைத் தீர்த்துக்கொண்டார். இதன் மூலம் சைவ கலாசாரத்தைப் பலமான முறையில் மீண்டும் ஸ்தாபித்தார். உண்மையில் கோளறு திருப்பதிகம் பாடிய திருஞானசம்பந்தர் சிவபெருமானுடைய அருளால் வெற்றி பெற்றார். ஆயினும் இச்சம்பவம் பற்றிச் சிறிது ஆராய்வோம். அப்பர் சுவாமிகள் விரும்பியது போல் மதுரைப் பிரயாணத்தைக் கொஞ்சம் தள்ளிப்போட்டிருந்தால் மன்னன் தானாகவே வெப்பு நோயினால் மரணம் அடைந்திருப்பான். அதன்பிறகு பாண்டியராணியை அனுப்பி விட்டு கோலகலமாகச் சம்பந்தர் மதுரையில் பிரவேசிக்கலாம்.

ஒரு சில பக்தர்கள் இருக்கின்றார்கள் கோயிலுக்குச் சென்று என்னுடைய பிரச்சனைகளைச் சொல்ல வேண்டும் இல்லாவிட்டால் அப்பிரச்சனைகள் கடவுளுக்குத் தெரியாது. ஒரு ஆள் நூறுமைல் தொலைவிலிருந்து விவாதிக்க வேண்டியிருந்தால் எப்படிச் செய்வார்? வெளியிலிருந்து கூச்சலிடமாட்டார் அவர் தொலைபேசி போன்ற தொடர்புக்கருவிகள் மூலம் பேசுவார் சிலர் கடவுளுடன் இப்படியெல்லாம் பேசலாம் என எண்ணுகின்றார்கள் அதாவது நாங்கள் சென்று சொல்லாமல் கடவுள் எங்கள் எங்கள் விவகாரங்கள் பற்றி அறியமாட்டார் என எண்ணுகிறார்கள் சர்வஞ்ஞியை அதாவது கடவுள் எல்லாம் அறியமுடிந்தவர். அத்துடன் சிலர் கடவுளுக்கு விவகாரங்களைச் சொல்லியபின் உடனடியாக நிவாரணம் அல்லது அனுகூலம் எதிர்பார்க்கின்றார்கள். கிடைக்காவிட்டால் இத்தெய்வம் சக்தி வாய்ந்ததில்லையெனக் கருதுவார்கள். இது குறுகிய மனப்பாங்கான எண்ணம். ஒரு மனிதன் வாழ்க்கையில் எல்லாம் கருமவினை அடிப்படையில் நடைபெறும். தேவர்கள்கூட இக்கர்மவினை கொள்கைகள் மீது தலையீடு செய்யமுடியாது. ஒவ்வொரு மனிதனும் குறிப்பிட்ட கர்மவினைப் பலன்களை பரிாணமரீதியாக அனுபவிக்க வேண்டும். பரமாத்மாவிலிருந்து பிரகாசமாகக் கர்மவினைக் கோட்பாடு ஒழுங்கில் தான் நடைபெறுகின்றது சிறுவன் ஒருவன் மதிய போசனத்திற்கு ஐந்து நிமிடங்கள் முன் தாயிடம் சொக்லேற் கேற்கலாம் ஆனால் அந்த நேரத்தில் தாய் சொக்லேற் கொடுப்பாளா? இல்லை ஏன்? காரணம் என்னவென்றால் தாயின் அன்பு ஆனால் அச்சிறுவன் இதைப்புரிந்து கொள்ள முடியுமா? அவன் நினைக்கின்றான் தாய் கொடூரமான செயலைச் செய்கின்றாளென்று அந்தப் பிள்ளை வளர்ந்த பின்புதான் தாயின் அன்பு நோக்கங்களை அறிகின்றான். எனவே நாங்கள் தூய்மையான பக்தியுடனும் அசையாத விசுவாசத்துடனும் ஆலய கருமங்கள் ஆற்ற வேண்டும். பஜனை என்பதன் பொருள் வழிபாடு என்பதாகும். பண்டமாற்று பொருளல்ல மறுபெயர் கீர்த்தனம். கீர்த்தனம் என்பதன் பொருள் புகழைப்பாடுதல் என்பதாகும்.

நல்ல இதயத்துடன் நற்காரியங்கள் செய்தால், மாமிச உணவு முறையைத் தவிர்த்தால் புனித பாடல்கள் மூலம் கடவுளைத் துதி செய்தால் நிச்சயம் கொஞ்சம் கொஞ்சமாக நிறைய ஜன்மங்களிலிருந்து வந்த கெட்ட கர்மவினைகள் அழிந்துபோகும். இறைவனுயை அனுக்கிரகம் மூலங்களிலிருந்து நிறைய பெற்றுக்கொள்ளப்படும்.

ஒரு ஊரிலே இரண்டு பேர் பக்கம் பக்கமாக வாழ்ந்து கொண்டிருந்தார்கள். இவ்விரண்டு நபர்களும் தனிப்பட்ட காரணத்தினால் ஒருவரோடு ஒருவர் பேசமாட்டார்கள் பின்னர் இவர்களில் ஒருவருக்கு அதிர்ஷ்ட லொத்தர் சீட்டுப் பரிசு கிடைத்தது இவ் விஷயத்தைக் கேள்விப்பட்ட அடுத்தவர் பரிசு பெற்ற நபரை அணுகினார். இப்போது நீ என்பழைய நண்பன் என்று அவருடன் கதைத்து பண உதவி செய்யும்படி கேட்டார். இதேபோன்று சிலர் இருக்கின்றார்கள் வழிபாடு செய்ய நேரமில்லை தேவையில்லை என்ற கொள்கையுடன் சீவிக்கின்றார்கள். ஆனால் பூலோக சம்பந்தமான நன்மைகள் தேவை என்றால் அந்நேரத்தில் மட்டும் இறைவனை நோக்கி வணங்குகிறார்கள்.

மதுபானம் அருந்தும் பழக்கமுடையவர்களுக்கு ஐந்து இழந்துபோகும் அந்த ஐந்து என்பதென்ன? ஒன்று புனிதம் என்பது இழந்துபோகும். இரண்டாவது புத்தி இழந்துபோகும். மூன்றாவது பண்பாடு இழந்துபோகும். நான்காவது பணம் இழந்துபோகும். ஐந்தாவது பொருள் இழந்து போகும் ஆகவே குடிப்பழக்கம் மிகக் கொடியது தவறானது.

திருஞானசம்பந்தர் ஏன் மந்திரமாவது நீறு பதிகம் பாடினார்? மாணிக்கவாசக சுவாமிகள் ஏன் பூசுவதும் வெண்ணீறு பாடினார்? அதாவது அவர்களுடைய சமாச்சாரம் இதுதான். நாங்கள் சைவ சமயத்தைக் கடைபிடிக்க வேண்டும். கடைப்பிடிக்கும்போது விபூதி பூச வேண்டும். அதில் விபூதி பூசுவது மட்டும் என்பது அவர்களுடைய கருத்தல்ல. ஆனால் இப்பழக்கத்தை அடிக்கடி பார்க்கின்றோம். அதாவது சமய அனுட்டானங்களைக் கடைப்பிடிக்காமல் விபூதி பூசுவதை மட்டும் காண்கின்றோம். குழந்தைகள் கோயில்களில் சுற்றி ஓடியாடி விளையாடுகின்றார்கள் கடைசி நிமிஷத்தில் பூஜை நிறைவேறும்போது அப்படியே வந்து விபூதி அணிந்து விட்டு பிரசாதம் வாங்கிவிட்டுச் சண்டை போடுகின்றார்கள். பின்னர் வீடு திரும்புகின்றார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கள். தேவாரம் பாடுவதில்லை. பஜனை செய்வதில்லை. சமயம் பற்றிப்படிப்பதில்லை. விளையாட்டும், சாப்பாடும்தான் அங்கு நடைபெறுகின்றது. ஒரு காலத்தில் ஒரு பிரஜை இருந்தார். அவரிடம் ஆடம்பரமான ஜப்பான் காரை வாங்க விரும்பினார். ஆனால் இவ் ஆடம்பரக்காரை வாங்குவதற்குப் பணமில்லை. இவ்விவகாரம் சம்பந்தமாகச் சிந்தித்தார். அப்புறம் ஒரு ஆடம்பரமான காரை மிகக் குறைந்த விலைக்கு வாங்கினார். விலைகுறைவுக் காரணம் உள்ளே எஞ்சின் இல்லாமையாகும். அவர் அவ்வாகனத்தைக் கர்வத்துடன் எல்லா நண்பர்களுக்கும் காட்டினார். நண்பர்கள் சொன்னார்கள் இவ்வாகனம் மிக அழகானது எங்களை ஒரு ரவுண்ட் கூட்டிக்கொண்டு செல்லுங்கள் என்று அவர் அப்போது சொன்னார் ரவுண்ட் போகமுடியாது. காரணம் எஞ்சின் இல்லை. (அத்துடன்) அப்படியாயினும் மிக வடிவானது என வலியுறுத்தினார். இது போன்று நாங்கள் செய்கிறோம் அல்லவா? உண்மையான சமய அனுட்டானங்கள் இல்லாமல் சிலர் விபூதி பூசுகின்றோம். வெளித்தோற்றத்துக்கு மட்டும் அழகாக விபூதி அணிகின்றோம். ஆனால் ஆன்மீக முன்னேற்றம் இல்லை அல்லவா? இது போன்று எத்தனை எத்தனை குழந்தைகள் கோயிலில் புனித நூலை அணிந்து கொண்டிருக்கின்றார்கள். ஆனால் சில நூல் அணிந்த பிள்ளைகளை ஒரு தேவாரம் பாட கேட்டால் வெட்கித் குறுகி நிற்கின்றார்கள். அதாவது உண்மையான பக்திப் பழக்கம் கிடையாது. கடவுளை நூல் மூலம் லஞ்சம் கொடுத்து வாங்க முயற்சி செய்கின்றார்கள். கௌரி காப்பினைப் பொறுத்தவரையில் சில கோயில்களிலே சரியான பூசையை கிரமம் செய்யாமல் கடைசி நாள் பூசையுடன் மட்டும் காப்பு கொடுக்கின்றார்கள். ஆகையால் விபூதி, நூல் காப்பு போன்ற பக்தி சின்னங்கள் நல்லது. வேடிக்கைக்கு மட்டும் நாங்கள் அணிய வேண்டாம். அதைப் பக்தி மனப்பான்மையுடன் அணியவேண்டும். புனித பஸ்மம் என்பது என்ன? சாஸ்திரங்களில் குறிப்பிடுகின்றார்கள். தூய்மையான பஸ்மம் (திருநீறு) எரிக்கப்பட்ட பசுவின் சாணத்திலிருந்து தயாரிக்கப்படுவது இப் புனித பஸ்மத்தின் உட்பொருள் என்பது என்ன? மனிதனுடைய ஸ்தூல சரீரம் (பூலோக உடல்) கட்டாயம் சாம்பலாகும். இது உருத்திர அழிவு சக்தியாகும். உண்மையில் இவ்வுலகத்தில் எல்லாப் பொருட்களும் தற்காலிகமானதே. பரமாத்துமம் மட்டுமே நிலையானது. மேலும் ஏன் இந்த திருநீற்றை நெற்றியில் பூசுகின்றோம்? காரணம் என்னவென்றால் யோகக் கண் அங்கு ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. இவ்யோக கண் சிவபெருமானுடைய வாசஸ்தலமாகும் ஆன்மசக்தி பீடமாகும். ஏன் நாங்கள் குங்குமம் யோகக்கண் மீது வைக்கின்றோம்? அம்பாளது குண்டலினி சக்தி அங்கு உள்ளது என சாஸ்திரங்களில் இது பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது. இக் குண்டலினி சக்தி சுசும்னமூலம் மேலான சக்கரங்களுக்கு ஏறும் பாது யோகிகளுக்கு அவர்களுடைய யோகக்கண்களிலிருந்து ஆத்மஞானம் உண்டாகும் இவ் யோகக்கண் சிவமும் சக்தியும் சந்திக்குமிடம் என்பது சாஸ்திரங்களில் கூறப்படுவது இத்திவ்விய சக்தி எல்லா ஜீவன்களுள்ளேயும் மறைக்கப்பட்டுள்ளது என்பதை நாம் மறக்ககூடாது. எனவே இவ் புனித திருநீற்றுடன் தெய்வீகமான காரணங்கள் சம்பந்தப்பட்டுள்ளது உண்மை, எனவே திருநீறு பூசுதல் வெளிப்படையான பழக்கம் மட்டும் அல்ல என்பது நிச்சயம். இக்காலத்தில் சில இந்துக்கள் அநியாயமாக விபூதியின் மகிமை சம்பந்தமான தத்துவம் மட்டும் தெரியாத தோடல்லாமல் அதை வைதீகமாகப் பெற்றுக்கொள்ளக்கூடத் தெரியாமலுள்ளனர். அத்துடன் சிலர் சமய தீட்சைக்கு முதலிடம் கொடுக்கிறார்கள். இவர்களில் சொல்கின்றார்கள் தீட்சை பெறாமல் விபூதி திரி புண்டரமாக (மூன்று விரல்களினால்) பூசவேண்டும் என்றும். இக்கருத்து தவறானது பிறப்பிலிருந்தே விபூதி அணியவேண்டியது எல்லா இந்துக்களின் கடமையாகும். இக்கொள்கை சம்பந்தமாக தேவிபாகவதம், என்ற நூலில் இந்துக்கள் விபூதி திரிபுண்டரமாக அணிய விரும்பாதவர்களுக்கு அடுத்த ஜென்மத்தில் பன்றிப் பிறப்பு கிடைக்கும் என்று கூறப்படுகிறது. பக்தி, மற்றும் சமய உணர்வுகளை விரும்பியவர்களுக்கு தீட்சை ஒரு ஊக்கப்படுத்தும் நல்ல காரியமாகும். ஆனால் நாங்கள் மறக்கவேண்டாம் தீட்ஷை ஒரு வெளிப்படுத்தும் கிரிகை என்பதை.

## வாழ்க்கையில் புனிதம் வளர்க்க

இறைவா !

நாங்கள் புகழ் நிறைந்து வாழ வேண்டும்
எங்கள் வாழ்க்கையில் புனிதம் நிலவ வேண்டும்
ஆத்ம பலத்தால் ஜீவசக்தி வளர வேண்டும்
எங்கள் வாழ்க்கை ஒளிர்ந்து திகழட்டும்

— அதர்வண வேதம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேதம் கூறும் கதைகள்

# "பக்திக்கு குலமேது"

கங்கை நதிக்கரையில் ரவிதாசர் என்ற விஷ்ணு பக்தர் வாழ்ந்து வந்தார். இவர் பிற்காலத்தில் ராயிதாசர் என்றும் ரோஹிதாசர் என்றும் அழைக்கப்பெற்றார்.

நற்குணம் நற்செயல் கொண்ட ரவிதாசர் பெற்றோரை தினமும் பசித்து அவர்களுக்குப் பணிவிடை செய்து வந்தார். தவறாமல் பரந்தாமனை வணங்கி வந்தார். தாழ்ந்த குலத்தில் பிறந்த ரவிதாசர் தமக்குத் தேவையானதற்கு மேலாக ஒரு ஜதை செருப்புக்கள் தைத்து சிறந்த பக்தருக்கு தானமாக அளித்து வந்தார். அதுவோர் அன்பின் சின்னமாகக் கொடுக்கப்பட்டது. அன்பும், பக்தியும் கொண்ட ரவிதாசரின் மீது மிக்க மகிழ்ச்சி கொண்ட 'பரந்தாமன்' ஒருநாள் ரவிதாசர் தோட்டத்தில் நீர் பாய்ச்சிக் கொண்டிருந்தபோது அந்த ஓடையில் சாளக்கிராம உருவில் தோன்றினார். 'ரவிதாசா' என்னை எடுத்துப்போய் உன் வீட்டில் வைத்து ஆராதனை செய் என்று அசரீரிவாக்கும் கிடைத்தது. அவ்வாறே ரவிதாசரும் சாளக்கிராமத்தை எடுத்துச் சென்று பூசை செய்ய ஏற்பாடுகள் செய்தார். ஆனந்தக்கடலில் மூழ்கிய ரவிதாசர் பஞ்சபாத்திரம், உத்தரணி, வட்டில்கள், புஷ்பக்குடலை மேற்றும் பெருமானை எழுந்தருளச் செய்யும் பீடம் இப்படி பூஜைக்குத் தேவையானதை முழுவதும் தோனலிலேயே செய்தார். இதைப்பற்றி கேள்விப்பட்ட அந்தணர் ஒருவர் ரவிதாசரைக்கண்டு "சாளக்கிராமபூசைக்கு அநேக நியமங்கள் கடைப்பிடிக்க வேண்டும். அப்படியிருக்க மிருகங்களின் தோலினாலான பூஜாபாத்திரங்களையும் தோலினாலான பீடத்தில் பெருமானை அமரச்செய்தும் பூஜை செய்கிறாயே? ... இது நியாயமா? மூட்டை மூட்டையாகப் பாவம்தான் உன்னைச் சேருகிறது" என்று கேவலமாகப் பேசினார்.

அந்தணருக்கு ரவிதாசனின் தூயபக்தி புலப்படவில்லை. "நீயோ நீச்சல்குலத்தவன்" நீ செய்யும் இந்த பூஜையும் நீச்சமானது! இதனால் நீ நரகத்திற்குப் போவாயே தவிர நிச்சயமாக சொர்க்கத்திற்குப் போவதில்லை! என்று அவன் மனம் புண்படும்விதத்தில் அடித்துக் கூறினார்.

ரவிதாசர் மனம் சோர்ந்து போனார். ஹே பிரபோ தயாசாகரா, உன்னைத்தவிர நான் யாரையாகிலும் நினைத்ததுண்டா? நீதான் என்னை இந்த பழிபாவத்திலிருந்து தடுத்தாட்கொள்ள வேண்டும். என்று கதறி அழுதார். அந்தணின் இலிச்சொற்கள் மற்றும் ரவிதாசரின் மனவேதனையைப் பொறுக்காத பகவான் அந்தணர் முன்னாலேயே ரவிதாசருக்குக் காட்சியளித்து "அன்பான ரவிதாசா" உனது தூய்மையான பக்தி உன்னையோர் உத்தமமான பிராமணனாக்கியது. பிரமத்தை அளித்தவன் எனது அன்பிற்கினியவன் நீ என்பதை உலகம் அறியட்டும் என்று கூறி மறைந்தார். ரவிதாசர் சரீரத்துடனேயே வைகுண்டம் சென்றார். அந்தணர் மனம் வருந்தி மன்னிப்பு கோரினார்.

ஆதாரம்,
கேனோபநிஷத்

---

(3ம் பக்கத் தொடர்ச்சி)

உள்ளே ஒரு தூண்டல் அப்படியே உண்மையைச் சொல்லிவிடுகிறான். இப்படி அவன் உண்மையைச் சொல்லிவிட்ட பொழுதில் நாம் அவனை அடிக்க முனைவதில்லை. இப்போதாவது உண்மையைச் சொன்னானே என்றே மகிழ்கிறோம். மனவேதனையும் ஒழிகிறது. அவனுக்கு புத்தி சொல்கிறோம். அதனால் அவனும் மகிழ்ச்சியடைகிறான், திருந்துகிறான்.

இதிலிருந்து ஒன்று தெரிந்து கொள்கின்றோம் 'உண்மை பேசுவது' தனக்கும், பிறர்க்கும் யாருக்குமே இன்பப்பயனையே தருகிறது என்பது தெளிவு

செய்யத் தகாததைச் செய்வதற்கு எவன் ஒருவன் நாணம் அடைகிறானோ அவனால் அவனுக்கும் பிறர்க்கும் இன்பமே. ஆகவே இங்கு சொல்லப்பட்ட அன்பு, ஒப்புரவு, கண்ணோட்டம், வாய்மை, நாணம் முதலிய நல்ல குணங்கள் மனிதரிடத்தில் எப்போதும் விளங்குமானால் உலகில் எங்கும் எக்காலத்தும் இன்பமே மணக்கும் என்பதில் ஐயம் உண்டோ?

அன்பு, நாணம், ஒப்புரவு, கண்ணோட்டம்,
வாய்மையோடு ஐந்து சால்பு ஊன்றிய தூண்

(திருக்குறள் - 983)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருக்கோணேஸ்வரம் இசைச்சித்திரம்

## — புலவர். வை. கு. சோமஸ்கந்தர் —

ஈழ நாட்டுச் சைவ மக்களின் இரண்டு கண்களாகத் திருக்கோணேஸ்வரமும், திருக்கேதீஸ்வரமும் விளங்குகின்றன. இவ்விரண்டு புனிதம் வாய்ந்த திருக்கோயில்களும் ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாக ஈடு இணையற்று விளங்கின. ஈழ நாட்டின் கிழக்குக் கடற்கரையில் திருக்கோணேஸ்வரமும், மேற்குக் கரையில் திருக்கேதீஸ்வரமும் அணி செய்கின்றன.

8000 ஆண்டுகளுக்கு முன்னே வீடணுடைய ஆட்சியில் இலங்காநகரம் சைவம் கொழிக்கும் பூமியாக விளங்கியது. வீடணுடைய விருப்பப்படி ஸ்ரீ ரேணுகாநாதர் மூன்றுகோடி சிவலிங்கங்களை இலங்கையில் பிரதிஷ்டை செய்தார்.

பூபாளம்

'' சிவகோடி யடையமுனஞ் செம்மறசக்
கிரீவனான
லவகோடி யகற்றியற் றறுகோடி ஆலயமும்
தவகோடி வீடனானற் றருமுக் கோடியுமாக
நவகோடி சிவாலயங் கண்ணியதிலங் காநகரம் ''

மாமூலனார் ஈழநாட்டைச் சிவபூமியென்று கூறுகின்றார். ஈழநாட்டில் மேருவின் குறியைக் காணலாம் என்கின்றார் மாமூலனார்.

மோகனம்

மேரு நடுநாடி மிக்கிடை பிங்கலை
கருமில் வானின் இலங்கைக் குறியுறுஞ்
சாருந் திலைவனத் தண்மா மலயத்து
பேறுஞ் சுழுனை இவைசிவ பூமியே.

ஆம் ஈழநாட்டில் மேருவின் குறி காணப்படுமிடம் திருக்கோணமலையாகும். தெட்ஷணகைலாசம் என்று போற்றப்படுவது திருக்கோணேஸ்வரமாகும்.

திருக்கோணேஸ்வரம் புனிதம் வாய்ந்த தெய்வத் தலம். இப்புனிதம் வாய்ந்த திருக்கோயிலை சூரிய குலத் தோன்றலான குளக்கோட்டு மன்னன் திருப்பணி செய்தான்.

ஆனந்த பைரவி

'' திருந்துகலி பிறந்து ஐந்நூற் றொருபதுடன்
இரண்டாண்டு சென்ற பின்னர்
புரிந்திடப மாதமதில் ஈரைந்தாந்தேதி
புணர் நந்நாளில்
தெரிந்தபுக ழால்யமுஞ் சினகரமும்
கோபுரமுந் தேரூர் வீதி
பரிந்துரத்ன மணிமதிலும் பாவநாசச்சுனையும்
பகுத்தான் மேலோன் ''

குளக்கோட்டு மன்னன் எழுப்பிய பெருங்கோயிலிலே கோணேசப் பெருமான் எழுந்தருளியுள்ளார்; ஆம் அந்த அழகுத் திருக்கோலத்தைக் காண கண்ணிரண்டு போதாது

செய்யமலர்த் தாளழகும் தாழ்மீதிற் சிலம்பழகும்
சிறுமானேந்தும்
கையழகும் மழுவழகும் செங்கமலக் கண்ணழகும்
கருணைப்பார்வைத்
துய்யமுக மலரழகும் புன்முறுவல் நகையழகும்
துலங்கித் தோன்றும்.

கோணேசப் பெருமானின் இடப்பாகத்தே பிடியன்ன நடையாள் மாதுமை அம்மை அழகு பொலிந்த திருக்கோலத்தில் காட்சியளிக்கின்றாள்.

தாம்போதி

'' பார்புரத்து திருவடியும் அடியவர்கள்
ஈடேறும்படியே பைம்பொன்
தார்புரந்த வடிவழகும் அழகெழு மங்கல
நாணும் தயங்கு சோதிக்
கார்நிகர்த்த கருங்குழலும் வெண்ணகையும்
செவ்விதழும் கருணைக்கண்ணும்
சீர்புரந்த பிடியன்ன மென்நடையின் அழகும்
தோன்றும் ''

11000 சுடர்விளக்குகள் ஆலயத்தை ஒளியூட்டுகின்றன பார்த்த இடமெல்லாம் ஒளிவெள்ளம். கிழக்கு வானம் ஒளிபெறுகின்றது. செங்கதிரோன் தன் ஒளிக்கரங்களால் இருட் குப்பையைப் புறம்போக்குகின்றான். நிலமகள் மகிழ்கின்றாள்.

அதோ படகொன்று கோயிலை நோக்கி வருகின்றது. படகு கரையை அடைந்துவிட்டது. எண்ணெய்க் கலசங்களைச் சுமந்து வந்து எண்ணெய்க்கிணறுகளில் ஊற்றுகின்றார்கள்.

அடானா

'' ஈதலேரண்டமுடன் இருப்பைபுன்னைப்
பருப்பிவைகள் இறையாத்தீவில்
சேதமற ஒப்புவிக்கச் செக்காட்டி எண்ணையவர்
திருந்தக்கட்டி
ஓதரிய கெவுரிமுனை மீகாமன் இடங்கொடுக்க
ஷகந்தே கோணை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீதமுறு கருகுலக் கணக்கிலுள்ள படிக்கிணற்றில்
ஊற்றுகின்றார் ''

அதோ குளக்கோட்டு மன்னன் மாதிரி பரிசனம் புடைசூழ வருகின்றான். தனியுண்ணாப் பூபாலன்...

'' வாழி குளக்கோட்டு மன்னா சிவன்பாதம்
வாழ்த்துகின்ற மன்னவநீ வருக ஈண்டு
வாழி நீ வையத்து நீண்ட வாழ்வு
வாழியவே நின்கொற்றம் சிறக்க நன்றே ''

'' வைத்தபுகழ் வன்னிமையே சொல்லக் கேளாய்
மகத்தான பாசுபதர் மறையோர் தங்கள்
சித்தமது நோகாமல் நீதிசொல்வாய்......

பைரவி

வையமகிழ் வன்னிமையே இன்னுங்கேளாய்
மனுநீதி தவறாதே கோபம்பாவம்
ஐயமற உண்தாரம் தாரமாகும் அயலகத்தோர்
தாரமெல்லாம் நின்தாயாகும்
மெய்யையெடு பொய்யைவிடு வினைசெய்யாதே
வறுமையுள்ளோர்க் குதவிசெய்வாய் இகல்
பண்ணாதே
மையனயை கண்டர்திருக் கோணைநாதர்
மகாபூசை திருப்பணியும் வழங்கச்செய்யே.

குளக்கோட்டன் ஆட்சியிலே கோணேசர் ஆலயம் சிறப்பாக விளங்கியது. முப்போதும் வழிபாடு நடைபெற்றது. கயவாகுமன்னன் கோணேசர் ஆலயத்தை அழிக்க வந்தான். அதனைக் கேள்விப்பட்ட பாசுபதர்கள் கடலில் வீழ்ந்து தங்களை கோணேசருக்கு அர்ப்பணம் செய்தார்கள்.

கயவாகு மன்னன் தன் தவறை உணர்ந்தான். சைவநாயக முதன்மை, வேதநாயக முதன்மை ஆகிய இருபாக முதன்மையினர் இருவரும் ஆலயத்தின் அர்ச்சகர்களாகின்றார்கள் கயவாகு பெருந்தொகையான வயல்நிலங்களை ஆலயத்துக்கு நிவந்தமாக அளிக்கின்றான்.

'' பலநூறு ஆண்டுகள்தான் சென்றபின்னர்
பல்லவர்கள் கோணேசர் ஆலயத்தில்
நலந்திகழத் திருப்பணிகள் பலதும் செய்து
நிறை எழிலாய் ஆலயத்தை ஆக்கினாரே ''

இராமேஸ்வரக் கடற்கரையில் நின்று திருஞானசம்பந்தர் கோணேசர் பெருமானுக்குத் தேவாரப் பாமாலை சூட்டுகின்றார்.

அதன்பின்னர் சோழ மன்னர்கள்... ..

'' கருங்கல்லைச் சமன்செய்து அடுக்கி எழிலாக
கோணேசருக் காயிரங்கால் மண்டபமும்
திருப்பணிகள் வேறுபல செய்தும் நன்றே
கோணேசர் ஆலயத்தைச் சிறக்கச்
செய்தார். ''

காலவெள்ளத்தில் பலநூறு ஆண்டுகள் உருண்டோடின சடையவர்மன் வீர பாண்டியன்.

'' காணாமன்னர் கண்டு கண்டொடுங்க
கோணாமலையிலும் திரிகூட கிரியினும்
உருகெழு கொடிமீசை இருகயல் எழுதினானே.

ஆலயத்தில் திருப்பணிகள் பலவும் செய்தான் வீர பாண்டியன் பல ஆண்டுகள் சென்றன. யாழ்ப்பாண ஆரிய அரசன் பரராசசேகரன் கோயிலுக்கு பொன் கொடுத்து இறைவனை வழிபட்டான்.

அன்ன நாளிடை யாழிகு முகன்புவி முழுதுந்
தன்னதாகவே தனிக்குட நீழலிற் றாங்கும்
மன்ன கும்பரராசசேகர னெனும் வள்ளல்
பொன்னு லாந்திரி கோணமால்வரை
தனிற்பொருந்தி
சிந்தையன் பினோ டரனுமை
தனைத்தரிசித்தான்
கந்தமனி வித பூண்மணி நிபந்தகள் அமைத்து
முந்துசீர் விழாத் தேர்த்திரு நாண்முறை
போற்றின்
சொந்த மாநகர் சேர்ந்தனன் பரராசசேகர
வேந்தன்.

ஆலயத்தில் வழிபாடும் திருவிழாக்களும் சீரும் சிறப்புமாக நடைபெற்று வந்தன. 1624ம், ஆண்டு சித்திரை வருடப்பிறப்பன்று .....

(மேளவாத்திய இசைஊர்வலம்)

சைவப்பெருமக்களனைவரும் கோணேசர் நகர்வலத்தில் ஈடுபட்டு அவன் பக்தியில் திளைத்திருந்தனர். போர்த்துக்கீசப் பறங்கியர் அந்தணர் வேடத்தில் ஆலயத்தில் அணுகினர், கோயிலைச் சூறையாடினர்.

ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாக ஆலயத்தில் சேர்ந்திருந்த பொன்னும், நவமணியும், பட்டாடைகளும் பறங்கியரால் சூறையாடப்பட்டன.

கோயிலை இடித்து ... கோயில் இடியும் ஓசை பீரங்கி முழக்கம்......கோயிற்கற்கள் சரிந்து விழுந்தன. பறங்கியர் ஆட்சியில்.........

மதசுதந்திரம் இழந்தனர் நம் மக்கள்
மதங்கொண்ட பறங்கியர் தம்மதம்
பரப்பினர்
சிதைந்தது நம் வழிபாடு யாவும்
சூழ்ந்ததே இருள் சமய வாழ்விலே

பிரித்தானியரின் ஆட்சிமலர்ந்தது. மதசுதந்திரம் மலர்ந்தது. கோயில் இருந்ததாக எண்ணிய இடத்தில் வழிபாடு நடைப்பெறத்தொடங்கியது.

இரண்டு நூற்றாண்டுகள் நகர்ந்தன. 1950ம், ஆண்டு நகராண்மைக் கழகத்தினர் வடகரைக் கடற்கரை ஓரமாக கிணறு வெட்டுகின்றனர். கோணேசரால்

(தொடர்ச்சி 16ம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சித்து அறிவியல் சுவட்டில்

— சித்தரடியான் —

இந்த உலகில் எத்தனையோ பேர் பிறக்கிறார்கள் வாழ்வினை ஒவ்வொருவிதமாய் வாழ்கிறார்கள் வாழ்ந்தபின் இறந்தும் போகிறார்கள். ஒவ்வொருவரும் ஒரு வேறுவிதமான மனிதத்தன்மை கொண்டவர்களாகவே வாழ்கின்றனர்.

இவ்வகையில் ஒருவிதமே சித்தர்களும் சித்தர்கள் தோன்றுவதிலும் அல்லது உருவாவதிலும் பல்வேறு விதிமுறைகள் விளக்கப்படுகின்றது பிறக்கும் பொழுதே ஒரு சிலர் சித்தர்களாயோ ஞானிகளாயோ பிறக்கின்றனர் அல்லது தோன்றுகின்றனர்

இவர்கள் '' கருவில் திருவுடையவர்கள் '' எனப் படுகின்றனர். இரண்டாவதாய் இறையருளில் ஒன்றிய ஞானிகள் இவர்கள் பக்தர்களாக மட்டுமே விளங்கினர். சிலவேளை சித்து விளையாட்டுகளிலும் வல்மை பெற்றிருந்தனர்.

மூன்றாவது வகையினர் யோகம் பயின்று சித்தரானோர் நாம் காணும் பதிணென் சித்தர்களும் இவ்வகையினுள்ளே வந்தடைகின்றனர்.
நான்காமவர் மை, பச்சிலை, மந்திரம் முதலியவை துணை கொண்டு வித்தை செய்வோராவர். இவர்கள் யாவரும் சித்தர்கள் எனும் போர்வையில் திரிவோரேயாயினும் இவர்கள் செய்பவை யாவும் சித்து அல்லாத வித்தைகள் மட்டுமே யோகத்தால் பெறும் சித்தி பற்றி சிறிது நோக்குங்கள்.

முதலில் பிராணாயாமம் என்கின்ற மூச்சுப் பயிற்சி முக்கிய பங்கினை வகிப்பதாகின்றது இப் பயிற்சியின் மூன்றுநிலைகளான பூரகம் எனும் மூச்சுக்காற்றை மெல்ல உள்ளே இழுப்பதும், கும்பகம் எனும் இழுத்த காற்றை உள்ளே நிறுத்துவதும் ரேசகம் எனும் நிறுத்திய காற்றை மெல்ல வெளியே விடுவதுமான மூன்றும் உடலில் பல மாற்றங்களை உண்டு பண்ணுகிறது. சரியான முறையில் பயிலும் பொழுது குறிப்பாக பிராணாயாமம் ஒரு தகுந்த குருவின் உதவியின்றி செய்தல் ஆகாததொன்றாகவே கருதப்படுகிறது.

எமது மூக்குத்துவாரங்கள் இரண்டுமான இடகலை அல்லது சந்திரகலை அல்லது இடப்பக்க துவாரத்தினூடாகவும் பிங்காலை அல்லது சூரியகலை அல்லது வலப்பக்க துவாரத்தினூடாகவும் மாற்றி மாற்றி பூரகத்தினையும் ரேசகத்தினையும் பயில வேண்டும். மூச்சானது இடையே நாசிங்னியில் நிறுத்தப்படுவது சுழுமுனை அல்லது அக்கினிகலை எனப் படுகிறது. காற்றின் போக்கானது ஐந்து நாழிகை அல்லது 5 24 நிமிடங்கட்கு ஒருமுறை மாற்றப்படும்.

சாதாரணமாய் நான்கு நொடி காற்றினை உள்ளிழுத்து, பதினாறு நொடிகள் உள்வைத்து, எட்டு நொடிப் பொழுதில் வெளிவிடுதல் பயிற்சியெனும் அவரவர் உடல் இயல்புக்கேற்ப கால அளவைகள் வேறுபடும். அத்துடன் பயிற்சியளவும் மாற்றப்படும் அடிப்படையில் வெளிப்படும் மூச்சுக்காற்றை அளவையில் கூறின், நடக்கும்போது 24 அங்குலமும் ஓடும் பொழுது 42 அங்குலமும் தூங்கும்போது 50 அங்குலமும் உடல்உறவின்போது 60 அங்குலமாய் வெளிப்படுகின்றது, ஆனால் 22 அங்குலமே கூடியது வெளிப்பட வேண்டுமென்றும் அதற்குமேல் வெளிப்படுபவை வீணான சக்தி விரயங்களே என்று சிவயோக சாரம் கூறுகிறது.

மூச்சினை உள்நிறுத்தப் பயின்ற யோகியர் அதனைக் கொண்டே குண்டலியை மேலேற்ற முயல்வல். நடுநாடி வழிஏறும் குண்டலினி ஆறு ஆதாரங்களிலும் பொருந்தி ஏழாம் ஆதாரமான சகஸ்ரத்தில் சென்று அமிர்தமாய் கீழ்வரும் இதனை யோகியர் நாவை மடித்து சுவைக்கின்றனர். புராணங்களில் கூறப்படுகின்ற அமிர்தம் நஞ்சு முதலானவை யாவும் இவ் அனுபவங்களின் வழி வந்தவையே.

குண்டலினி சந்திக்கும் ஒவ்வொரு ஆதாரமும் சாதனைகளையும் சக்திகளையும் தருகின்றது இவையே பொதுவாய் சித்திகள் என குறிப்பிடப்படுகின்றது.

'' மூவகை சித்தியின் முடிவுகள் முழுவதும்
ஆவகை எனக்கருள் அருட் பெருஞ்சோதி ''
என்று

இராமலிங்கர் தம் அகவலில் சித்திகளை மூவகையாய் கூறுகின்றார். அவையாவன' கருமசித்தி, யோகசித்தி, ஞானசித்தி என்பனவாம்.

கருமசித்தி என்பது அணிமா முதலிய அட்டமா சித்திகளாகும். யோக சித்தியில் அறுபத்துநான்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சித்திகள் செய்யப்படுகின்றது. இங்கு இறந்தவர்களை எழுப்பலும் கைகூடும். ஞானசித்தியில் 688 கோடி மகாசித்திகள் பெறப்படுகின்றது.

இவற்றில் ஞானசித்தியானது கரும ஞானசித்தி யோகஞானசித்தி, தத்துவஞானசித்தி, ஆன்மஞான சித்தி, சுத்த ஞானசித்தி, சமரசசுத்த ஞானசித்தி என ஆறாய் பிரசுரிக்கப்படுகிறது. இதில் முதல் நான்கும் தனித்தனியே முடிநிலை, அடிநிலை சித்திகள் என இரண்டிரண்டாய் பிரிக்கப்படுகிறது. கடைசி இரண்டும் இவ்வகையாய் முடிநிலை, அடிநிலை சித்திகள் என பிரிக்கப்படுகிறது.

மேற்கூறிய ஆறு தவிர அந்தரங்க சித்தி, பகிரங்க சித்தி, தத்துவசித்தி, தாத்வீக சித்தி என மேலும் நான்கு வகை கூறப்படுகிறது. இவை முறையே பிண்ட சித்தி, அண்ட சித்தி, பகிரண்ட சித்தி, அண்டாண்ட சித்தி எனவும் குறிக்கப் பெறும்.

இவற்றுள் பிண்ட சித்தி எனப்பெறும் அந்தரங்க சித்தி மேலும் 14 உட்பிரிவுகளை உடையது. அவை யாவன பூதசித்தி, குணசித்தி, விந்து சித்தி, கரண சித்தி, பிரகிருதிசித்தி, பரசித்தி, இந்திரயசித்தி, புருடசித்தி, சுத்தசித்தி என்பனவாகும்.

மேலும் கூறப்படும் காலசித்தி, வியோமசித்தி, பரமசித்தி, சிவசித்தி பற்றியும் அவற்றின் வகை பற்றியும் விரிவாக எந்த சித்தரும் கூறவில்லை.

இதைவிட ஆடுறுசித்திகள் அறுபத்து நான்கெழு கோடி என்றும் அறிவுறு சித்திகள் அனைந்தம் கோடி என்றும் கூறப்படுகிறது.

சித்திகள் பெற்றோர் செய்வனவற்றினை கூறும் பொழுது, பூமியின் உள்ளே போவர், வானத்தில் பறப்பர், கடலில் நடப்பர், கடல் நீரை குடித்து உமிழ்வர், மலையைத் தாங்குவர், நட்சத்திரம் போல் பொலிவுடையவர், காற்றுப் போன்ற வேகமுடையவர், நெருப்பொத்த வலிமையுடையவர், இடியொத்த குரலுடையவர், படைத்தல், காத்தல், அழித்தல் ஆகிய தொழில் செய்வர், ஆகாயத்தே சுழற்சியினையுடையவர், மதம் பிடித்த யானையை அடக்குவர், கரடி வெம்புலிவாயை கட்டுவர், சிங்கத்தின் முதுகில் ஏறுவர், காற்றில் மறைவர், என்றும் இளமையோடு இருப்பர், கூடு பாய்வர் என்பதாக.

சித்தர் பாடல்களிலும் மேலும் பல இலக்கியங்களிலும் கூறப்பட்டுள்ளது. இவை யாவற்றையும் விடா முயற்சியாலும் தொடர்ந்த முயற்சியாலும் சாதிக்க முடியும் என்றும் கூறப்படுகிறது. இவ்வாறான பயிற்சிகளில் முதலாவதாக உடல் பயிற்சிக்கு மந்திர உபசரணையோ தவ வலிமையோ தேவையில்லை. தொடர்ந்த பயிற்சியே போதுமானது. தொடர்ந்த பயிற்சி மூலம் உடலை எம் கட்டுக்குள் கொண்டுவரவே இப்பயிற்சியின் நோக்காகும்.

அடுத்தது மனப்பயிற்சியாகும். இங்கு மனதில் நுட்பத்தை அதிகரித்து அதன் சக்தியை அளப்பரிய தாக்கல்.

மெஸ்மரிசம், ஹிப்னாடிசம், அஷ்டாவதானம், தசாவதானம், சதாவதானம் முதலியவை மனப் பற்யிசியினால் கைகூடுகின்ற வித்தைகளே.

ஒருசிலரால் மூலிகைகள், மைகள், மந்திரங்கள் கொண்டு செய்யப்படுகின்ற வியக்கத்தக்க செயல்கள் யாவும் வித்தைகளே அன்றி சித்து அல்ல.

சித்து செய்யப்படுவதற்கு இந்திரிய ஒழுக்கம், கரண ஒழுக்கம், ஜீவ ஒழுக்கம், ஆன்ம ஒழுக்கம் ஆகிய நான்கு ஒழுக்கங்களும் அவசியமாகின்றது.

இவ்வாறு ஒழுக்கங்களை கடைப்பிடித்து ஆன்ம பலத்தினால் சித்தி கைகூடப்பெறுபவர்கள் சித்தர்களாய் ஜொலிக்க' ஆன்ம பலமின்றி வித்தை செய்வோர் ஏமாற்றிப் பிழைக்கின்றனர்.

வளரும்......

(14ம் பக்கத் தொடர்ச்சி)

யத்தின் பழைய திருவுருவங்கள் அகப்படுகின்றன. கோணேசர்மலையிலுள்ள மண்டபத்தில் அத்திருவுருவங்கள் பிரதிஷ்டை செய்யப்படுகின்றது. பக்தர்கள் திரள்திரளாகச் சென்று வழிபாடு செய்கிறார்கள்

மணியோசை மேளம் தேவாரம்......

1953ம், ஆண்டு புதிய கோயில் கட்டிட வேலைகள் தொடங்கியது...... 1963ம், ஆண்டு பங்குனி மாதம் கோணேசப்பெருமானுக்குக் கும்பாபிஷேகம் நடைப் பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருக்கோணமலை மாவட்ட இந்து இளைஞர் பேரவையின் செய்திச் சரம்

● திருக்கோணமலை மாவட்டத்திலுள்ள தெரிவு செய்யப்பட்ட ஐம்பது வயோதிபர்களுக்கு மாதாந்தம் தலா 200/- ரூபாப்படி பேரவையால் மாதாந்தம் 10,000/- வழங்கப்பட்டு வருகின்றது, தொடர்ந்து ஒரு வருடத்திற்கு இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு விரிவுபடுத்தப்படவுள்ளது.
நிதி உதவி :- டச் உட் கோயில் நிதி நிறுவனம்-நெதர்லாந்து.

● பிரதி மாதமும் நோன்மதி நாட்களில் திருக்கோணமலை அருள்மிகு விஸ்வநாதசுவாமி சிவன் ஆலயத்திலிருந்து அதிகாலையில் பேரவையின் நிருவாகிகள், தொண்டர்கள், இந்து மகளிர் அணியினர் மற்றும் பாடசாலை இந்து மாணவர்கள் அருள்மிகு திருக்கோணேஸ்வரத் திருத்தலத்துக்கு நடை பஜனையை மேற்கொண்டு வருகின்றார்கள்.

● மாதம் ஓர் ஆலயத்தில் பேரவையால் சிரமதானப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இந்த வகையில் இப்பணியில் ஆர்வத்துடன் அவ்வப் பகுதியிலுள்ள இந்து இளைஞர்களும், இந்து மக்களும் பங்குபற்றி வருவது மகிழ்ச்சியை அளிக்கின்றது.

● மகாசிவராத்திரியை முன்னிட்டு பேரவையின் பஜனைக்குழுவினர் கிண்ணியா அருள்மிகு ஊற்றடிப் பிள்ளையார் ஆலயம், கிண்ணியா பட்டினசபைத் தொழிலாளர் பகுதி அருள்மிகு அம்மன் ஆலயம், ஆலங்கேணி அருள்மிகு விநாயகர் ஆலயம், ஈச்சந்தீவு அருள்மிகு விநாயகர் ஆலயம் முதலான ஆலயங்களில் பண்ணிசையையும் பக்திப்பாடல் நிகழ்ச்சிகளையும் நடத்திச் சிறப்பித்தனர். மேலும் அருள்மிகு கிண்ணியா ஊற்றடிப்பிள்ளையார் ஆலயத்தில் முதலாம் சாம விசேட பூசையும் அபிஷேகமும் பேரவையால் நடத்தப்பட்டது.

● பேரவையின் திட்ட ஆலோசகராக இருவருடங்கள் பணியாற்றி அண்மையில் தமது தாயகமான அவுஸ்திரேலியாவுக்குச் சென்ற பேரவையின் திட்ட ஆலோசகர் திரு. கிறிஸ் றைஸ்லி அவர்களுக்கு சிறப்பான முறையில் ஓர் பிரிவுபசார சேவை நலம் பாராட்டும் வைபவம் பேரவையால் தி/புனித பிரான்சிஸ் சவேரியர் மகாவித்தியாலயத்தில் அளிக்கப்பட்டது. இவருக்குப் பேரவையின் ஞாபகார்த்தமாக மோதிரம் ஒன்று வழங்கப்பட்டது. அத்துடன் ஆங்கிலத்தில் வாழ்த்துப்பத்திரம் வாசித்து வழங்கப்பட்டது.

● தம்பலகாமத்திலுள்ள கூட்டாம்புளி என்னும் கிராமத்தில் பேரவையின் உப அலுவலகமொன்று தம்பலகமம் பிரஜைகள் குழுத்தலைவர் திரு. அ. தில்லைநாதனால் திறந்துவைக்கப்பட்டது. இவ் உப அலுவலகத்தின் மூலம் பல அபிவிருத்திப்பணிகள் இப்பகுதியில் மேற்கொள்ளப்படவுள்ளன.

● பேரவையின் இந்து கலாசார நிதியிலிருந்து பின்வரும் நிதி உதவிகள் ஆலயங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

அ. அருள்மிகு விஸ்வநாத சுவாமி சிவன் ஆலயம் - திருக்கோணமலை - 1,00,000/-
ஆ. செல்வநாயகபுரம் விநாயகர் ஆலயம் - 5,000/-
இ. சம்பூர் அரசடி விநாயகர் ஆலயம் - 5,000/-
ஈ. சூடைக்குடா விநாயகர் ஆலயம் - 5,000/-
உ. இலிங்கநாதர் கோணலிங்கப் பிள்ளையார் ஆலயம் - 5,000/-
ஊ. கிண்ணியா ஊற்றடிப் பிள்ளையார் ஆலயம் - 3,000/-
மொத்தம் ;- - 1,23,000/-

● இறக்கக்கண்டியிலுள்ள அகதிகளுக்கு நிவாரணம் வழங்கப்பட்டது.
மொத்தச்செலவு - 2,573.25

● மாணவர்களுக்கு பின்வரும் அடிப்படையில் கல்விக்கான உதவிகள் வழங்கப்பட்டன. ஒக்ஸ்பாம் நிறுவன நிதி உதவி 76 மாணவர்களுக்கு தலா ரூபா 550/- வீதம் வழங்கப்பட்டது. இத்திட்டத்தில் 1,25,400/- வழங்கப்பட்டது. இலங்கை மாணவர் நம்பிக்கை நிதிய நிதி உதவி 42 மாணவர்களுக்கு வழங்கப்பட்டது. இதில் ரூபா 56,000/- வழங்கப்பட்டது. இவ்விரு திட்டங்களின் மூலம் மொத்தமாக 1,81,400/- வழங்கப்பட்டது குறிப்பிடத்தக்கதாகும்.

● ஈச்சிலம்பற்று உதவி அரசாங்க அதிபர் பிரிவில் உள்ள விநாயகபுரத்தில் மொத்தமாக ஒரு இலட்சம் ரூபா செலவில் விருட்சம் அலுவலகம் பேரவையால் அவுஸ்திரேலியா சமூக நிதி உதவித்திட்ட உதவி மூலம் அமைத்து வழங்கப்பட்டுள்ளது.

(தொடர்ச்சி 18ம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்து சமய வினா விடைப் புதிர் - 14
### சரியான விடைகள்

1. "நமச்சிவாய வாழ்க நாதன்தாழ் வாழ்க...."
2. மோகம் - நல்லறிவை மயக்குவது;
   மதம் - உலக இன்பங்களை மேலாக மதிக்கச் செய்வது.
   ராகம் - உலக இன்பங்களில் ஆசையை உண்டாக்குவது;
   விஷாதம் - அனுபவித்த இன்பம் பின்பு கிடையாத போது வருத்துவது;
   சோஷம் - பற்றுள்ளவர்களில் இருந்து நீங்க வேண்டிய காலத்தில் வருந்தி உடம்பை மெலியச் செய்வது.
   வைசித்திரியம் - ஆன்மா தன்னிலுள்ள குற்றங்களைக் கடவுளிலேற்றித் தன்னுடைய பெருமைகளை வியந்து அதிசயிக்கச் செய்வது.
   அரிசம் - உலக இன்பங்களை அனுபவிக்கும் போது ஆன்மா தனக்கு ஒரு குறையுமில்லை என நினைக்கச் செய்வது.
3. சுந்தரமூர்த்தி நாயனார்.
4. சித்திரித்தல் அல்லது - சகல அண்ட சராசரங்களும் தோன்றிநின்று ஒடுங்குவதற்கு நிலைக்களமாய் உள்ளது.
5. ஆ லயம் - ஆலயம் கடவுளுடைய திருவடியில் ஆன்மா ஒடுங்குதற்குரிய இடம்.
   ஆ ஆன்மா, லயம் - சேர்த்தல் அல்லது ஒடுங்கு
   ஆ ஆணவமலம், லயம் - அடங்குதல், ஆணவ மலம் அடங்குதற்குரிய இடம்.
6. "நமசிவாய" அல்லது "சிவாயநம"
7. எருது.
8. மாசி மாதத் தேய்பிறை சதுர்த்தசியில் அனுட்டிக்கப்படும்.
9. ஆணவம், கன்மம், மாயை ஆகிய மூன்று மலங்களையும் உடையவர்கள்.
10. குங்கிலியக் கலய நாயனார்.

(17ம் பக்கத் தொடர்ச்சி)

● ஈச்சிலம்பற்று உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள சினன்வெளி, உப்பூரல் பகுதியிலுள்ள மீனவ குடும்பங்கள் பதின்நான்கு பேருக்கு உதவும் பொருட்டு 96,517 ரூபா பெறுமதியான மீன்பிடி வலைகள் வழங்கப்பட்டன.

நிதி உதவி ;- அவுஸ்திரேலியா சமூக உதவி நிறுவனம். (C. A. A)

## பரிசு பெறுவோர் விபரம்

முதலாம் பரிசு :

செல்வன். வி. வைகுந்தன்
தி / இ. கி. ச. ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக்கல்லூரி,
க. பொ. த (உயர்தரம்) திருக்கோணமலை.

இரண்டாம் பரிசு :

செல்வன். செ. முத்துக்குமார்
தி / செல்வநாயகபுரம் அ. த. க. பாடசாலை,
திருக்கோணமலை.

மூன்றாம் பரிசு :

செல்வன் செ. சந்திரகுமார்
தி / மல்லிகைத்தீவு, மகா வித்தியாலயம்,
ஆண்டு 10 ஏ.

ஆறுதல் பரிசுகள் :

1. செல்வன். க. பிரதீபன்
   223, பிரதான வீதி, திருக்கோணமலை.
2. செல்வி. சுகாஜினி
   14, பள்ளத்தோட்டம், திருக்கோணமலை.
3. செல்வி. செ. புஸ்பாதேவி
   ஸ்ரீ சண்முகா இந்து மகளிர் கல்லூரி,
   திருக்கோணமலை.

## மாணவர் உலகு

1. அன்பால் நிறைந்த அமுதசுரபியாக விளங்கும் புராணம் எது?
   பெரிய புராணம்.
2. பெரிய புராணத்தைப் பாடியவர் யார்?
   சேக்கிழார் சுவாமிகள்.
3. பெரிய புராணம் யாரைப் பற்றிக் கூறுகின்றது?
   63 நாயன்மார்களின் வரலாற்றையும், ஒன்பது தொகையடியார்களின் வரலாற்றையும் கூறுகின்றது.
4. திருத்தொண்டர் தொகையைப் பாடியவர் யார்?
   சுந்தரமூர்த்தி நாயனார்.
5. திருத்தொண்டர் திருவாந்தாதியைப் பாடியவர் யார்?
   நம்பியாண்டார் நம்பி.

(தொடர்ச்சி 19ம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவராத்திரி விரத மகிமை

— செல்வி. மயூரதி அமிர்தலிங்கம் —

எல்லாம்வல்ல இறைவன் உயிர்களாகிய நாம் உய்யும்பொருட்டு வேதம், சிவாகமம், சாத்திரங்கள் முதலியவற்றை அருளிச் செய்துள்ளான். அவற்றுள் விதித்தவற்றை மக்களாகிய நாம் செய்தல் வேண்டும். விலக்கியவற்றை நீக்கல் வேண்டும். இங்ஙனம் பரமேஸ்வரனால் விதிக்கப்பட்டவற்றுள் ஒன்று சிவ விரதங்களை அனுஷ்டித்தல் என்பதாகும்.

சிவவிரதங்கள் எட்டென்று உபதேசகாண்டம் கூறும். அவையாவன சோமவார விரதம், திருவாதிரை விரதம், உமாமகேசுவர விரதம், சிவராத்திரி விரதம், கல்யாணசுந்தர விரதம், சூலவிரதம், இடப விரதம் என்பனவாகும். இவற்றுள் மேலானது சிவராத்திரி விரதமாகும். சிவராத்திரி விரதமானது மாதசிவ ராத்திரி, யோகசிவராத்திரி, பக்கசிவராத்திரி, நித்ய சிவராத்திரி, மாசி சிவராத்திரி என ஐந்து விதத்தில் அனுஷ்டிக்கப்படும். இவற்றுள் மாசி மாதத்தில் அபரபட்ச சதுர்த்தியில் உபவாசமிருந்து, துயில் நீக்கி நான்கு யாமங்களிலும் சிவபிரானை வழிபடும் விரதமே மிக மகிமை பொருந்தியதாகும். எனவே இவ்விரதம் மகாசிவராத்திரி எனப் போற்றப்படும் சிவராத்திரி விரதத்தின் மேன்மையை கீழ்வரும் பாடல் மிகத்தெளிவுபட விளக்கி நிற்கிறது.

'' மறைகளிற் சாமம்; மகளிற் புரவி
மகம்; மலைகளில் மகமேரு;
திறைபுனல் நதியின் கங்கை; ஓர் ஐந்தாய்
நிகழ்ந்த பூதத்தின் ஆகாயம்;
முறைதெரி சுரரிற் கருமுகில் ஊர்தி
முதன்மை பெற்றுயர்ந்ததே போல
அறைதரு விரதம் அனைத்திலும் உரைக்கும்
அரன் இரவு அதிகம் என்று அறமின். ''

இவ்விரதத்தின் சிறப்பைப் பற்றி ஸ்ரீ பரமேஸ்வரனே பார்வதி தேவிக்குக் கூறினார். மகாசிவராத்திரியைப் பற்றிப் பேசுபவர்களிற்கு யமபயமில்லை. பல யாகங்களைச் செய்வதன் காட்டிலும் இப்பண்டிகையை அனுஷ்டிப்பது மிகவும் புண்ணியமாகும். சிவராத்திரி விரதத்தால் கிடைக்கும் நற்பயன் கங்கை முதலிய புண்ணிய தீர்த்தங்களில் நீராட்டினால் கூடக்கிடைக்காது. சிவராத்திரிக்கு ஒப்பான வேறு சிறந்த விரதம் எதுவுமில்லை. தெரிந்தோ தெரியாமலோ இப் பண்டிகையைச் செய்கிறவன் சர்வ துக்கங்களிலிருந்தும் விடுபட்டுவிடுவான். சர்வமங்கலங்களையும் அளித்து சர்வ அமங்கலங்களையும் போக்க வல்லமையுள்ள விரதமாகும். இவ்வுலகில் எல்லாச் சுகங்களையும் அளித்து பரலோகத்திலும் நல்ல சுகங்களையும் அளிக்கும். அழகு வாய்ந்த முகமுள்ள பார்வதியே ! இது சத்தியம் ! இது சத்தியம் !

சிவராத்திரி தோற்றம் பற்றிக் கூறப்படும் ஒரு கதை உமையம்மையாரின் வழிபாடாகும். கற்பாந்த காலம் சூழ்ந்தது. உலகம் யாவும் ஒடுங்கி மறைந்தன. உயிர்த்திரள் ஒடுங்கிற்று. சோமசுந்தரப் பெருமான் ஒருவரே வெளியனாய் வெளியில் நிற்கிறார். அப் பெருமானின் பாகம் பிரியாமலிருக்கும் அம்மையார் பெருமானின் சொரூபசுந்தரத்தில் ஈடுபட்டுப் பூசனை புரிந்திருந்தார். அடுத்த கற்பம் தொடங்குமளவும் பூசனையில் நிலைத்திருந்தார். அடுத்த கற்பகாலம் தொடங்கியது உயிர்க்குலங்கள் மலர்ந்தன. உலகங்கள் பொலிந்தன. சிவபூசனைச் சுவையில் நிலைத்திருந்த உமாதேவியார், உயிர்த்திரள் தம்மைப் போன்ற பூசித்து சிவப்பேற்றையடைவதற்குத் திருவுளம் பற்றினார். சிவபிரானிடம் நான்கு யாமமும் பூசனை செய்து வழிபாடாற்றக்கூடிய பொழுதாக சிவராத்திரிப் பொழுது அமைய வேண்டும் எனவும்

(தொடர்ச்சி 20ம் பக்கம்)

---

(18ம் பக்கத் தொடர்ச்சி)

6. திருத்தொண்டர் புராணத்தின் காவிய நாயகன் யார் ?
சுந்தரமூர்த்தி நாயனார்.

7. '' உலலொம் '' என்று பெரியபுராணம் பாடுவதற்கு அடியெடுத்துக் கொடுத்தவர் யார் ?
சிவபெருமான்.

8. '' பக்திச் சுவை நனி சொட்டச் சொட்டப் பாடிய கவிவலவ எனப்பிற்காலத்துப் புலவர் ஒருவர் யாரைப் பாராட்டுகின்றார் ?
சேக்கிழார் சுவாமிகளை

9. பெரிய புராணம் எத்தனையாம் திருமுறை ?
பன்னிரண்டாம் திருமுறை

10 திருத்தொண்டர் புராணம் பாடுவதற்கு தூண்டுதல் அளித்த மன்னன் யார் ?
அநபாயன் எனப்படும் இரண்டாம் குலோத்துங்கன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(19ம் பக்கத் தொடர்ச்சி)

அவ்விரவில் வழிபாடு ஆற்றுவோருக்கு அருள் பாலிக்க வேண்டும் எனவும் வேண்டுதல் செய்தார். இவ்வாறாகத் தோன்றியதே சிவராத்திரி விரதம் என்பதாகும்.

சிவராத்திரி தோற்றம் பற்றிக் கூறப்படும் இன்னொரு கதை பிரமவிஷ்ணுக்கள் அடிமுடி தேடிய கதையாகும். இக்கதை கந்தபுராணத்தில் தட்ச காண்ட அடிமுடிதேடு படலத்தில் விரிவாக எடுத்துக் கூறப்படுகிறது.

'' அரியும் யானும் முன் தேடும் அவ்
அனற்கிரி அலை,
கிரி எனும் படி நின்றதால் !
அவ்வொளி கிளர்ந்த
இரவதே சிவராத்திரி
யாயினது இறைவன்
பரவி டய்ந்தனர் அன்னதோர்
வைகலிற் பலரும் ''

மகா சிவராத்திரியின் பெருமையுணர்த்தும் வரலாறுகள் பலவுள்ளன. அவ்வரலாறுகளுள் வேடன் ஒருவனின் வரலாறு பிரபலமானது இவ்வரலாறு திருவைகாவூர் என்னும் திருத்தலத்தில் நிகழ்ந்தது இப்புனித தலத்தில் வாழ்ந்த வேடன் ஒருவன், ஒரு நாள் புலியின் ஆபத்தை எதிர்நோக்குகின்றான்., தன்மேல் பாய்வதற்கு ஆயத்தமாகப் பதுங்கிக் கொண்டு இருந்த புலியைப் பார்த்துவிட்ட அவன், பக்கத்தே நின்ற வில்வமரத்தை நோக்கி விரைந்தோடிச் சென்று ஏறிக்கொண்டான். புலி வந்து மரத்தடியில் பதுங்கிக் கொண்டது மாலையாகி இருளத் தொடங்கியதும் கண்துயிலாது விழித்திருப்பதன் அவசியத்தை அவன் உணர்ந்தான் (அன்று மகாசிவராத்திரி தினமாகும்) விழித்திருப்பதற்கு உதவியாக வில்வமரத்து இலைகளை ஒவ்வொன்றாகக் கிள்ளிக் கீழே போட்டுக்கொண்டிருந்தான். பொழுது புலர்ந்ததும், புலி இருந்த இடத்தில் ஒரு சிவலிங்கம் இருப்பதைக் கண்டான் அவனை எதிர்நோக்கிய இடுக்கண் நீங்கத்தொடங்கியது அவன் இவ்வுலக வாழ்வை நீத்த பின்பு முத்திப்பேற்றையடைந்தான். எனக் கூறப்படுகிறது. வேடன் சிவராத்திரிப்பொழுதில் விழித்திருத்தல் பற்றியோ, வில்வம் பத்திரத்தால் சிவலிங்கத்தை அர்ச்சிப்பது பற்றியோ ஏதுமறியான் ஆனால் அவனது விழிப்பும் பத்திரமிடுகையும் பொருள் பற்றிச் செய்கின்ற பூசனை போலாயின. இம்மை, மறுமை இரண்டின் பயனும் சித்தித்தது.

சுகுமாரன் என்னும் வேதியனின் வரலாறு சிவராத்திரிப் பெருமையுணர்த்தும் இன்னொரு வரலாறாகும். அவன் களவு, காமம் ஆகிய பாதகச்செயல்களில் ஊறிப்போன ஒருவனாக இருந்தான். ஆயினும் ஒரு சிவராத்திரி நாளன்று நாககன்னியர் நடத்திய சிவராத்திரி வழிப்பாட்டைக் கண்ணுற்றான். சிந்தை நெகிழ மெய்குளிர்ந்து நின்றான் பித்தனான சிவபிரானின் கருணை அவன் மீது பெருகியது சிறு பள்ளத்திலே நெடுநாள் அழுதும் கெட்டபாசியை ஏற்றிவிடும். பெரு வெள்ளத்தைப்போல் அவனது பாவத்தைப் போக்கிப் புனிதனாக்கியது. இருவினைக் கணக்கின்படி அவனைப்பிடித்துச் செல்ல முயன்ற போது சிவகணங்கள் தலையிட்டு சிவராத்திரி விரதத்தில் சிந்தை செலுத்தியோனுக்கு வினைக்கணக்குகள் இல்லையென வாதிட்டுச் சிவலோகத்தில் சேர்த்தன.

சிவராத்திரி புராணத்தில் இக்கதை காவியநயம்படபாடப்பெற்றிருக்கிறது. இவ்விரு கதைகளும் நேர்த்தி, சங்கல்பம் ஆக்ய விரத ஆயத்தங்கள் இல்லாமலும் விரத அனுஷ்டானங்கள் அனைத்தையும் முறைப்படி அனுஷ்டியாமலும் தற்செயலாக ஓரிரு விரத கைங்கரியங்களைப் புரிந்தோரும் பெரும்பேறு பெற்றனர் என்பதற்கு எடுத்துக்காட்டான கதைகளாகும்.

புலையர் குலத்தவள் ஒரு கிழவி, நோயால் வருந்தி சிவராத்திரி தினத்தில் பிச்சை கேட்க, வழிப்போக்கன் ஒருவன் ஒரு வில்வ இதழை அவளிடத்தே எறிய, அதை அவள் எடுத்து பக்கத்தில் எறிந்தாள். அந்த வில்வம் பக்கத்திலிருந்த ஒரு லிங்கத்தின் மேல் விழுந்தது. அப்புண்ணியச் செயலால் அவள் சிவபதமடைந்தாள்.

இவ்விரதத்தை நோற்றதனால் திருமால் பிரணத்துவம் சிவனருளால் அடைந்தார். பிரமன் படைப்புத்தொழிலைப் பெற்றான். இந்திரன் தேவருலகிற்கு அரசனானான். இருடியர்கள் இறைவனது திருவடிப் பேற்றை அடைந்தார்கள். குபேரன் நிதிச்செல்வனானான். வருணனும், வாயுவும் அதிசயிக்கத்தக்க சக்தியைப் பெற்றார்கள். விநாயகர், முருகன், வீரபத்திரர், ஐயனார், கணத்தலைவர்கள், நந்தி, பிருங்கி மாகாளன் ஆகியோர் இந்த விரதத்தை நோற்று அரிய பதவிகளைப் பெற்றார்கள்.

இவ்விரதத்தை பின்வருமாறு அனுஷ்டித்தல் வேண்டும். விரதத்திற்கு முதல்நாள் ஒரு போதுண்டு, இரவில் தரையில் நித்திரை செய்து, விரததினம் அதிகாலையில் நீராடி நித்திய கடன்களை முடித்துச் சிவாலயம் சென்று பெருமானை வழிபட்டு வீடு திரும்புதல் வேண்டும் வீட்டில் சிவபூசை செய்யும் இடத்தை மெழுகிக் கோலமிட்டு, மாவிலை முதலியன வற்றால் அலங்கரித்தல் வேண்டும். பகற்போதில் இரவுப்பூசைக்கு வேண்டும். பொருட்களைச் சேகரித்,

(தொடர்ச்சி 21ம் பககம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலயங்கள் எமது உடல் நலத்தைப் பேணுகின்றனவா ?

இந்து ஆலயங்கள் தெய்வ பக்தியையும் சமயத்தையும் மட்டுமே வளர்ப்பதற்கென அமைந்தவை என எம்மிற் பலர் நம்புகின்றோம். பகுப்பாய்வு செய்து பார்க்கின் ஆலயங்களின் அமைப்பு முறைகள் அவற்றில் பயன்படுத்தப்பெறும் கட்டிடப் பொருட்கள் ஆகியவை வேறுபாடான கருத்தையே புலப்படுத்துகின்றன. முதலாவதாக, கணேசப்பெருமான் சந்நிதியில், எமது செவிகளை விரல்களால் தொட்டப்படி, குந்தியும் எழுந்தும் தோப்புக்கரணம் போடுகிறோம். இது உடற்பயிற்சிக்கு ஒப்பானது, அதனினும் மிக்கதென்றும் கூட சொல்லலாம்.

இரண்டாவது, சுற்றுப்பிரகாரம் கருங்கல்லினால் பாவுப்பட்டுள்ளது. கருங்கல் துண்டங்களில் நுண்ணிய துளைகளுள்ளதால் நாம் அதன்மீது வெறுங்காலுடன் நடக்கும்போது எமது உள்ளங்காலின் வெவ்வேறு பகுதிகளில் அழுத்துகின்றன எமது உள்ளங்காலின் வெவ்வேறு பகுதிகள் நரம்பு மையங்களைக் கொண்டுள்ளன. குறித்ததொரு பகுதி அழுத்தப்பட்டதும் அதனுடன் தொடர்புள்ள உடற்பகுதி உடனே இயக்கம்பெற்றுத் திறனுடன் செயற்படத் தொடங்குகிறது இதேபோல எமது உள்ளங்காலின் அனைத்துப்பகுதிகளும் அழுத்தப்பெற்றதும் அவை எமது அனைத்து உடற்பகுதிகளும் திறனுடன் செயற்பட உதவுகின்றது இந்திய மருத்துவ முறைமையில் இன்று இது கூரழுத்தம் என வழங்குகிறது

சுற்றுப்பிரகாரத்தில் தஷிணாமூர்த்தி (சிவன்) விக்கிரகம் ஓர் மரத்தின் கீழ் குரு பாவனையில் அமர்ந்திருப்பதைக் காணலாம். நாம் அவர் திருமுன் அமர்ந்து செபித்து அல்லது தியானம் செய்வதென்பது தலைமுயையாக அனுட்டிக்கப்படுகிறது. அவர் தெற்கு நோக்கி வீற்றிருக்கிறார். நாம் அவர் முன் அமரும்போது வடக்கு நோக்கி இருந்தே தியானிக்கிறோம். இதன் பெறுபேறாக எமது உடல் வடக்கிலுள்ள காந்தப்புலத்தினால் ஈர்க்கப்படுகிறது. இதனால் எமது குருதிச்சுழற்சி சீராகிறது. வலிகள் உபாதைகளிலிருந்து நாம் விடுபடுகிறோம். எமக்கு மன அமைதி கிட்டுகிறது. தன்னியக்கக் காந்த சிகிச்சை எமக்குக் கிடைக்கிறது.

ஒவ்வொரு சிவாலயமும் தன் சுற்றுப்பிரகாரத்தில் மருத்துவத்தன்மை கொண்ட ஒரு மரத்தைக் கொண்டுள்ளது நாம் அமர்ந்திருந்து தியானிக்கும்போது அந்த மரத்தைத் தழுவி வரும் மென்காற்று எம்மையும் அரவணைக்கிறது. இதனால் நோய்க் கிருமிகள் ஒழிக்கப்பெற்று, எமது சுவாசப்பைகள் துப்பரவாக்கப்பெற்று, அசுத்தங்களும் உள்ள குறைபாடுகளும் விலக்கப்பெறுகின்றன. இயற்கைப் பரி

(தொடர்ச்சி 22ம் பக்கம்)

---

(20ம் பக்கத் தொடர்ச்சி)

துக் கொள்ளல் வேண்டும். மாலைக்காலத்தில் சிவாலயம் சென்று பரார்த்தபூசைக்கு வேண்டும் பொருட்களைக் கொடுத்தல் வேண்டும். பின்னர் வீட்டிற்கு வந்து நீராடிப் பூசைத்தானத்தில் உயர்ந்த பீடத்தில் சிவபெருமானை எழுந்தருளச்செய்து நான்கு சாமமும் விதிதவறாமல் ஒன்றிய சிந்தையராயிருந்து பூசை செய்யவேண்டும். நான்கு சாமத்தும் மெய்யன்போடு சிவபூசை செய்யும்போது விசேஷமாக முதலாம் சாமத்தில் பஞ்சகௌவ்வியத்தினாலும், இரண்டாம் சாமத்தில் பஞ்சாமிர்தத்தினாலும் மூன்றாம் சாமத்தில் தேனாலும் நான்காம் சாமத்தில் கருப்பஞ்சாற்றினாலும் அபிஷேகம் செய்ய வேண்டும். முதலாம் சாமத்தில் சந்தனக்குழம்பும் இரண்டாம் சாமத்தில் பச்சைக்கற்பூரச் சுண்ணமும் நான்காம் சாமத்தில் குங்குமமும் சாத்தல் வேண்டும். முதற்சாமத்தில் வில்வமேனும், துளசியேனும், தாமரையேனும் இரண்டாம் சாமத்தில் தாமரையேனும், துளசியேனும் மூன்றாம் சாமத்தில் சண்பகமலரேனும், வில்வமேனும் நான்காம் சாமத்தில் நந்தியாவர்த்த மலரேனும் வில்வமேனும் சாத்தல் வேண்டும் வில்வம், நொச்சி, மாவிலங்கை, முட்கிளுவை, விலா இவற்றில் இலைகளை முக்கிளையாகக் கொய்து நான்கு சாமத்தும் சாத்தலாம். முதலாம் சாமத்தில் முற்கான்னமும் (பயறு) இரண்டாம் சாமத்தில் பாயசன்னமும் மூன்றாம் சாமத்தில் திலான்னமும் (எள் அண்ணம்) நான்காம் சாமத்தில் சுத்தன்னமும் (வெண் சாதம்) நிவேதித்தல் வேண்டும் நான்கு சாமத்திலும் சுத்தான்னமும் நிவேதிக்கலாம்.

இந்துக்களது சமயவாழ்க்கையில் முக்கியத்துவம் பெற்று ஒரு பொற்சங்கிலியாகத் திகழும் விரதங்களுள் மிகவும் மேன்மையானதான சிவராத்திரி விரதம் பற்றியும், அதனை நோற்றுப்பேறு பெற்றாரின் நிலை பற்றியும், அதனை அனுஷ்டிக்கும் முறை பற்றியும் சிவபெருமானின் விருப்பத்திற்குகந்த விரதமாகவும் காணப்படுகிறது எனக்கூறின் வியப்பில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரத்திற்கு இதனையோர் எடுத்துக்காட்டாகக் கொள்ளலாம் மூன்று தடவைகள் மட்டும் சுற்றுப் பிரகாரத்தில் நடந்து வருவது நடைப்பயிற்சியை மேற்கொள்ளவும் உடலை உறுதியாக வைத்திருக்கவும் உதவுகின்றது. வழமையான நாளாந்த உடற் பயிற்சிக்கு இது ஓர் உதாரணமாகும்.

மூல மூர்த்திக்கும் இறைவிக்கும் திருமுன் நாம் நிற்கும்பொழுது இவ்விக்கிரகங்களிலிருந்து பெருக்கெடுத்துவரும் அருட்பிரவாகத்தில் நாம் தோய்கிறோம். கற்களின் இலட்சணங்கள் அறிந்தவர்களால் இதற்கெனத் தொலைத்தூரத்திலுள்ள மலைகளிலிருந்து தெரிந்தெடுக்கப்பெற்ற கற்களிலிருந்துதான் இவை செதுக்கப் பெற்றவையாகும் சூரியன், சந்திரன், பிரபஞ்சம், மழை காற்று ஆகியவற்றின் ஆதிக்கத்தினால் இவை அளவிறந்த வண்மை, சக்தி, கனித்தாது மற்றும் இயல்புகளினால் பாய்ச்சப்பெற்றவை என நம்பப்படுகிறது. அந்த விக்கிரங்களின் திருமுன் எமது உடலும் உள்ளமும் புத்துணர்ச்சியடைகின்றன இக்காரணத்தினால் தான் நாம் இவ் விக்கிரகங்களின் திருமுன் இடுப்பு வரையிலான துறந்த மேனியராகத் தோற்ற வேண்டுமெனக் கூறப்பட்டுள்ளது

இறுதியாக நாம் வணங்கும் பாண்மையால் உடற்பயிற்சியில் தண்டா எனப்படும் பயிற்சியைச் செய்கிறோம் இது உடம்பின் பல்வேறு உடற்பகுதிகளான கழுத்து, இடுப்பு, முழங்கை, முழந்தாள், கணுக்கால் பொருத்துகளின் செயற்பாட்டை இலகுவாக்குகின்றது.

இவையனைத்தும் இந்து ஆலயத்தை, உடல் நலம் பேணும் இல்லம், உடல் பயிற்சி அரங்கு, மருத்துவ நிலையம் ஒன்றினைந்ததொரு இடமாக்குகின்றன.

ஆதாரம் - ''விஸ்டம்'' ஆங்கில திங்கள் இதழ்
தொகுப்பு - க. கனகராசா

---

## வாசகர் கடிதம்

திரு. இரா. யசோதரன்,
ஆரையம்பதி - 01,
ஆரையம்பதி.
1995 - 05 - 06

ஆசிரியர்,
சிவநெறி,
தி. மா. இ. இ. பேரவை,
திருக்கோணமலை.

ஐயா !

1994 ஐப்பசி - கார்த்திகை - மார்கழி இதழில் வெளிவந்த ''1624ல் கோணேஸ்வரம்'' என்ற கட்டுரை தற்கால கோணேஸ்வரத்துக்கு முன்பு கோணேஸ்வரம் எவ்வாறு இருந்தது என்ற ஆய்வு விடயதானம் பாராட்டுக்குரியது. அடுத்து ''இந்துக் கிரியை, என்ற கட்டுரையும் அதனுள் அடங்கியுள்ள கருப்பம் சமூக நோக்கின் நிகழ்வையும் சமய நோக்கின் விளக்கத்தையும் தந்த இவ்விரு கட்டுரையாளர்களையும் முதன்மையாக வாழ்த்துவதுடன் ஏனைய கட்டுரையாளர்களது ஆக்கங்களையும் வாழ்த்துகின்றேன். இருப்பினும் சட்டென புலப்படுவது ஒரு குறை. அது தலையங்க விடய குறை. மாணிக்கவாசகர் திருவாசக நோக்கும் அந்த கட்டுரையாளர் தலைப்புக் கேற்றவாறு விடயப் பொருளை வழிக்காட்டவில்லை, ஆயினும் திருமுறையில் பாடும் பதக் குறையே சுட்டி இதனை விடுவிக்க வேண்டுவதே அவரது வேண்டுகோள். அதனை யானும் வரவேற்கிறேன் இதே போன்று பல தவறை நிவர்த்திக்க தரமான ஆக்கம் செய்ய முன்வர வேண்டுமென அன்பரை வேண்டுகின்றேன் இவ்விதழில் ''சந்தேக நிவர்த்தி''க்கு முற்றிடப் பட்டு விட்டதோ என புலனாகவில்லை அப்பகுதி தொடர்ந்து வெளிவர ஆசிரியர் முன்வருமாறும் கேட்கின்றேன். சிவநெறியின் சிவப்பணி வளர்க வாழ்க என பாராட்டுகின்றேன்

இப்படிக்கு
சிவநெறி வாசகன்
இரா. யசோதரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்து சமய வினா விடைப் புதிர் - 15

இந்துசமய தத்துவங்களையும் அதன் உண்மைகளையும் அறியும் பொருட்டு இதன் கீழ் தரப்பட்டுள்ள எல்லா வினாக்களுக்கும் இப்பத்திரத்தில் விடை எழுதி அனுப்பி வையுங்கள்.

(1) படைத்தலாவது யாது ?

(2) கிரியை வழிபாடாவது யாது ?

(3) தேவாரம் அருளிச் செய்தவர்கள் யாவர் ?

(4) விபூதியை அணியும்போது எவ்விதிகளை கடைப்பிடிக்க வேண்டும் ?

(5) சைவசமயத்தவர்களால் நியமமாகச் செபிக்கற்பாலதாகிய சிவமந்திரம் யாது ?

(6) ஆன்மாக்கள் முத்திநிலையில் எவ்வாறு இருக்கும் ?

(7) கடல், ஆறு, குளங்களில் நீராடும்போது கடைப்பிடிக்க வேண்டிய விதிகள் யாவை ?

(8) அர்ச்சனைக்குரிய தீர்ப்புகள் எவை ?

(9) வில்வ விருட்சத்தில் இருந்து வில்வத்தைப் பறித்தெடுக்கலாகாத காலங்கள் எவை ?

(10) விக்கினேசுவரரைத் தரிசிக்கும் பொழுது எவ்வாறு வழிபடல் வேண்டும் ?

குறிப்பு : இப்பத்திரத்தில் அல்லது இதனை இணைத்து விடை எழுதினால் மாத்திரமே ஏற்றுக்கொள்ளப்படும்.

பெயர் :- ..........................................................................................

முகவரி :- ..........................................................................................

| | |
|---|---|
| முதலாம் பரிசு | - 50/- |
| இரண்டாம் பரிசு | - 25/- |
| மூன்றாம் பரிசு | - 15/- |
| ஆறுதல் பரிசு மூன்று தலா | - 10/- |

விடைகளை அனுப்பவேண்டிய முகவரி :

ஆசிரியர்,
'' சிவநெறி ''
தி: மா. இ: இ: பேரவை
393, திருஞானசம்பந்தர் வீதி,
திருக்கோணமலை.

முடிவுத் திகதி 26 - 06 - 1995 (07 handwritten correction)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

15 வயதுக்குட்பட்ட சிறுவர்கள் சிவநெறி சிறுவர் வட்டத்தில் சேரலாம்.

உறுப்பினர்களாகச் சேர ஆர்வமுள்ளோர் சிவநெறியில் வெளியாகும் இரு கூப்பன்களை நிரப்பி அனுப்புதல் வேண்டும்.

உறுப்பினர்களாகச் சேர்ந்த மாணவர்கள் எழுதும் தரமான ஆக்கங்கள் சிவநெறியில் அவ்வப்போது வெளியாகும்.

ஆக்கங்களை மாணவர் தாமாகவே எழுதினார் என்பதை சம்பந்தப்பட்ட பாடசாலை அதிபர் உறுதிப்படுத்த வேண்டும்.

உறுப்பினர் உறுப்புரிமை அட்டை அஞ்சல் மூலம் அனுப்பிவைக்கப்படும்.

விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி.

ஆசிரியர்,
''சிவநெறி''
393, திருஞானசம்பந்தர் வீதி,
திருக்கோணமலை.




## சஞ்சிகைக் குழு

★ திரு. கு. கோணாமலை ஆசிரியர்
★ திரு. க. சவுந்தரராசா துணைஆசிரியர்
★ திரு. வ. தங்கராசா
★ திரு. செ. சிவபாதசுந்தரம்
★ திரு. சு. கனகசபாபதி
★ திரு. நா. காளிராசா
★ திரு. கெ. தர்மகுலராசா
★ புலவர் வை. சோமாஸ்கந்தர்
★ திரு. பூ. புவனேஸ்வரன் வி. பொறுப்பாளர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சிவநெறி வளர வாழ்த்துகின்றோம்"

# ஆர். ரீ. காந்த் டெயிலரிங்

# R. T. KANTH TAILORING

நவநாகரீகமான ஆடைகளைத் தைத்து வழங்கும்
சிறந்த டெயிலரிங் நிலையம்

**BEST TAILORING MART FOR TAILORING NEW FASHIONABLE DRESS**

உரிமை : இ. ரகுநாதன்

***PROP : R. RAGUNATHAN***

***No. 84, Thirugnanasampanthar Street, Trincomalee.***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

" சிவநெறி வளர வாழ்த்துகின்றோம் "

நெல்சன் தியேட்டர்

&

நிருஷா ஸ்டுடியோ

ஸ்தாபனத்தினர்

திருக்கோணமலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org